விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 05 செவ்வாய்க்கிழமை (19.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 182

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812
(C-2862)

## சுவாசப்பையினை குண்டு துளைத்து சென்றதால் மரணம் நிகழ்ந்தது

### உயிரிழந்த இளைஞனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு



(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் சுன்னாகம் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நபரது சுவாசப்பையினை குண்டானது துளைத்து சென்றமையால் சுவாசப்பை முற்றாக சேதமடைந்து அத 24☛

## மல்லாகக் குழு மோதல் தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெறுவதற்கு காரணமான குழு மோதல் சம்பவம் தொடர்பாக ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரி 23☛

## ஒரே குடும்பத்தில் குழந்தைகளை பலியெடுத்த இருதய நோய்

### மூன்றாவது சிறுமி நேற்று மரணம்




(வவுனியா)

வவுனியாவில் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த சிறுமியின் சகோதரியும் நேற்று இருதய நோயி 24☛

# பறிக்கப்பட்ட எமது உரித்துக்களை கேட்பதனால்

# சிங்கள மக்கள் கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை



### பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் முதல்வர் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்) அரசுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும் வகையில் வடக்கு முதல்வராகிய நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என தெரிவித்த பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம், எம்மிடம் பறிக்கப்பட்ட உரித்துக்களை நாம் கேட்டால் சிங்கள மக்கள் கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை என முதல்வர் பதிலளித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## தபால் ஊழியர்கள் பணிக்கு திரும்பாவிடின்

### பதவி விலகியதாக கருதப்படும் தபால்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

தபால் திணைக்கள ஊழியர்கள் அனைவரும் உடனடியாக பணிக்குத் திரும்பி அறிக்கையிடத் தவறினால் தாமாகவே பதவி விலகினர் (விலுபி) என்று எடுத்துக் 24☛

## 50வீதமான காணியே இராணுவம் விடுவிப்பு

### பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் யாழ்.மேயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்த காணிகளில் ஐம்பது வீதமானவையே விடுவிக்கப்படாதுள்ளதாக 23☛

### வலிகாமம் வடக்கில்

## 60ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

25 வருடங்களுக்கும் மேலாக சொந்த மண்ணில் கால்தடம் பதிக்க முடியாமல் ஏங்கிய வலிகாமம் வடக்கின் பல குடும்பங் 24☛

## அடுத்த முதல்வர் வேட்பாளராக மாவையை ஏற்க முடியாது


### ரெலோ தலைமைக்குழு கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவை ஏற்க முடியாது எனவும் சி.வி.விக்னேஸ்வரனையே முதலமைச்சர் வேட்பாளராக ஏற்க முடியும் என ரெலோ 24☛

## முதலமைச்சர் விக்னேஸ்வரனை கூட்டமைப்பு ஆதரிக்காவிட்டால் தமிழ்த்தரப்பு உடையும்

### புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளின் ஆதரவுடனேயே முதலமைச்சர் வேட்பாளர் தேர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவித்த புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன். முதலமைச்சர் விக்னேஸ்வரனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரிக்காவிட்டால் தமிழ்த் தரப்பு இரண்டாக உடைந்து விடும் என தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தலில் வடக்கு முதலமைச்சர் வேட்பாளராக வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனை ஆதரிப்பதா 23☛

## முதல்வர் விக்னேஸ்வரனின் நூல் வெளியீடு சம்பந்தர் சிறப்புரை ஆற்றுகிறார்


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரைகள் அடங்கிய "நீதியரசர் பேசுகிறார்" எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 24-ம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் சிறப்பு விருந்தினராகக் கலந்து 23☛

## மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதிப் பாலம்

### முதலமைச்சரால் நாளை திறந்து வைப்பு



24☛

### சுதாகரனின் பிள்ளைகளை

## சந்திக்காமல் ஏமாற்றிய மைத்திரி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியை சந்திக்க ஆவலோடு காத்திருந்த, ஆயுள் தண்டனை கைதி ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.

வெற்றிலையுடனும், கோரிக்கை கடிதத்துடனும் நீண்டநேரம் காத்திருந்த அவர்களை ஜனாதிபதி சந்திக்காத நிலையில் இருவ 23☛

## குழு மோதல் பற்றி அறிந்த பொலிஸார் ஓட்டம் பிடித்தனர்

### யாழ்.பிறவுண் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் இடம்பெற்ற குழு மோதலை கண்ட போக்குவரத்துப் பொலிஸார் அவ்விடத்தைவிட்டு வேகமாக நழுவிச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று யாழ் நக 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், மலசலகூட பராமரிப்பு சேவை என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள்கேள்வி அறிவித்தல்-2018

யாழ்.மாநகர சபையினால் 22.05.2018ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கும், கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக, இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.07.2018-31.12.2018 திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற் கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் - ரூபா 500.00 (வரி நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் -19.06.2018 - 25.06.2018 (மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை)
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் -26.06.2018 மு.ப. 9.30 மணி வரை
கேள்விப்படிவம் திறத்தல் -26.06.2018 மு.ப 10.00 மணிக்கு

**நிபந்தனைகள்**

1.2018ஆம் ஆண்டுக்கான கேள்வியில் சித்தி பெற்று 2/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள் கேள்வியில் சித்தி பெறினும் பரிசீலிக்கப்பட மாட்டார்கள்

## மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 91,271.25 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5000.00 | 29,176.88 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5000.00 | 104,139.00 |
| 4 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5000.00 | 437,074.58 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5000.00 | 40,947.38 |
| 6 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5000.00 | 437,428.69 |
| 7 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5000.00 | 443,059.58 |
| 8 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 400,396.50 |
| 9 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 46,099.46 |
| 10 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 157,106.25 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 395,533.69 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5000.00 | 179,550.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5000.00 | 159,600.00 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5000.00 | 112,268.63 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5000.00 | 112,218.75 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5000.00 | 99,824.81 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5000.00 | 110,872.13 |
| 18 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5000.00 | 173,066.25 |
| 19 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5000.00 | 29,805.30 |
| 20 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5000.00 | 5,756.82 |
| 21 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 282,536.89 |
| 22 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 35,959.88 |
| 23 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7000.00 | 266,462.18 |
| 24 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7000.00 | 202,367.81 |
| 25 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7000.00 | 264,641.74 |
| 26 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7000.00 | 203,789.25 |
| 27 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5000.00 | 33,250.00 |
| 28 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 630,135.00 |
| 29 | பண்ணை மீன் சந்தை | | 10,000.00 | 1,747,919.25 |
| 30 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 161,096.25 |
| 31 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 32,767.88 |
| 32 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிசசாலை | | 1,000.00 | 76,383.27 |
| 33 | யாழ்.கச்சேரியடி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 165,754.58 |
| 34 | யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 119,700.00 |
| 35 | பொது மலசல கூடங்களை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 2,000.00 | 74,812.50 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம்.
2018.06.19

இ.த.ஜெயசீலன், ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை.













# அதிகாரம் ஆளுநரிடம் என்றால் எமக்கு பாதகம் விக்னேஸ்வரன்

மாகாண சபை காலம் முடிந்த பின்னர் ஆட்சி அதிகாரங்களை ஆளுநரிடம் கையளித்தால் எமக்கு பாதகமாக இருக்கும் என வடக்கு முதல்வர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ம்மாகாணத்தில் மாகாண சபை ஆட்சிக்காலம் முடிந்த பின்னர் ஆளுநரிடம் ஆட்சி அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆளுநர் தான் நினைத்தவாறு நடவடிக்கை எடுக்கிறார். அது பலருக்கு பாதகமாக உள்ளது என தெரிவிக்கிறார்கள். அதே மாதிரி விடயம் எமது மாகாணத்திலும் நடக்க கூடும். அதனால் மாகாண சபை தேர்தல் தள்ளி போவதானால் எமக்கும் கால அவகாசம் தர வேண்டும் என கூறியுள்ளதாக தெரிவித்தார்.(ம-9)












## இலங்கைப் படைகளுக்கு எதிராக

# ஆர்வம், அர்ப்பணிப்புடன் ‘துரோகம் அரங்கேறுகிறது’

## பதறுகிறார் மகிந்த

(கொழும்பு)

இலங்கைப் படையினரை, வெளிநாட்டுச் சக்திகளிடம் காட்டிக்கொடுக்கும் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்புடன் துரோகம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவெனக் குற்றஞ் சாட்டியுள்ளார்.



இந்த நாட்டின் நீண்டகால வரலாற்றை உற்று நோக்கும் போது, நாட்டைக் காட்டிக்கொடுத்த துரோகிகள் காணப்பட்டனரென்றும் தெரிவித்துள்ள அவர், இவ்வாறு ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்புடன் துரோகம் செய்துகாட்டிக் கொடுக்கும் ஆட்சியாளர்கள், ஒருபோதுமே இந்த நாட்டில் இருந்ததில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்திருந்த ஊடக அறிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில்,

“ஆரம்பச் சட்டத்தின் நோக்கம், நாடுகளைச் சேர்ந்த சந்தேகநபர்கள் அல்லது சாட்சியாளர்கள் இலங்கையில் இருப்பார்களாயின் அல்லது இந்நாட்டுக்குத் தேவையான அவ்வாறான நபர்கள் வேறு நாடுகளில் இருந்தார்களாயின், அவர்களை இனங்கண்டுகொள்ளல் மற்றும் தேடியறிதல், அவ்வாறான நபர்களுக்கு அழைப்பாணை கிடைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், சாட்சியாளர்களிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுக்கொள்ளல், அதனடிப்படையில் சாட்சிகளுக்கான ஆதாரங்களைத் தேடுதல், வழக்குப் பொருட்களுக்கான சோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றைக் கைப்பற்றிக்கொள்ளல் ஆகியன குறிப்பிடப்பட்டிருந்தன.

“அதுமட்டுமன்றி, சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தல், குற்றச்செயல்களின் மூலமாக திரட்டப்பட்ட சொத்தை அபகரித்தல், அவ்வாறான சொத்துகளை இடைநிறுத்தல் ஆகிய காரணங்களின் போது, வெளிநாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான பரஸ்பர ஒத்துழைப்புடன் நடந்துகொள்ளல்.

“இந்தச் சட்டமானது, பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பொதுநலவாய நாடுகள் சிலவற்றுக்கும் இவ்வாறான செயற்பாடுகளின் போது, இலங்கையுடன் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள நாடுகள் சிலவற்றுக்குமே மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

“எனினும், ஆரம்பச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டதன் ஊடாக, சட்ட மூலத்தின் வடிவத்தில் ஓரளவுக்கு மாற்றம் ஏற்படும். திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளுக்குள், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் போன்ற சர்வதேச அமைப்புகள் உள்நுழைந்துள்ளன.

“வேறு நாடுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்து மூல சாட்சி மற்றும் வேறு நாடுகளில் இருக்கின்ற நபர்களினால், வீடியோ தொழில் நுட்பத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் ஆகியவற்றை, நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

“வெளிநாடுகளிலிருந்து வரும் கோரிக்கைகளுக்கு விரைந்து பதிலளிக்கக்கூடிய வகையில், குற்றவியல் சார்ந்த விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நிர்வாகப் பொறிமுறையை பாரியளவில் வியாபிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

“இந்தத் திருத்தமானது, இன்னுமிரண்டு சட்டத்துடன் பிணைந்துள்ளது. அது, காணாமல் போனோருக்கான அலுவலகம் மற்றும் காணாமற் போவதைத் தடுப்பதற்கான சர்வதேச சாசனத்தை நாட்டுக்குள் செயற்படுத்துவதற்கான சட்டங்களாகும்.

“அவற்றிலிருக்கும் ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கைக்குள் காணாமற்போனதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களை, தங்களிடம் ஒப்படைக்குமாறு, அந்தச் சாசனத்தின் ஊடாக, வெளிநாடுகள் கோருவதற்கான அதிகாரமும் உள்ளன.

“இவ்வருடம் மே மாதம் 18ஆம் திகதியன்று, அதாவது புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டு ஒன்பது வருடங்கள் நிறைவடைந்த நாளன்றே, குற்றவியல் சார்ந்த விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

“அந்தச் சந்தர்ப்பத்தில், நாட்டின் பல்வேறான பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த வெள்ள அனர்த்தம் காரணமாக, மககளது கவனம் வேறுபக் கத்துக்குச் சென்றிருந்தது. இந்த நாட்டின் நீண்டகால வரலாற்றை உற்றுநோக்கும் போது, நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகிகள் காணப்பட்டனர் என்றாலும், இவ்வாறு ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்புடன் துரோகம் செய்து காட்டிக்கொடுக்கும் ஆட்சி யாளர்கள், ஒருபோதுமே இந்த நாட்டில் இருந்ததில்லை” என்று மகிந்த ராஜபக்ஷ, தனது அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

## எட்டு நாட்களுக்குப் பிறகு நாடு திரும்பினார் ரணில்

(கொழும்பு)

எட்டு நாட்கள் தனிப்பட்ட பயணமாக கட்டார் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.



கட்டார் விமான சேவைகளுக்குச் சொந்தமான QR-668 என்ற விமானத்திலேயே பிரதமர், நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பிரதிநிதிகள் குழு கடந்த 10ஆம் திகதி கட்டார் நாட்டுக்குப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு




பூமாலை
வினாத்தாள் தொகுதி விடை, விஷேட கையேடு.
15 எதிர்பார்க்கை வினாக்களுடன்

Rs. 700/-

15 வித்தியாசமான வினாத்தாள்கள் மாணவர்களின் உன்னதமான வெற்றிக்கு வழிகாட்டும்

ஆசிரிய வளவாளர்கள்

01. ஜனாப் M. C. நிஷாம் அக்கரைப்பற்று
02. Mr. J. J. பெனாட் இளவாலை - யாழ்ப்பாணம்
03. திரு. க. ஹம்சன் நவாலி - யாழ்ப்பாணம்
04. திரு. எம். சுகந்தன் மானிப்பாய் - யாழ்ப்பாணம்
05. திரு. த. சரத்பாபு சண்டிலிப்பாய் - யாழ்ப்பாணம்
06. திரு. எம். ஜெயக்குமார் திருக்கோவில் - அக்கரைபற்று
07. திரு. கா. செந்தில் நாதன் கல்முனை
08. திரு. கே. ரஷிகரன் மட்டக்களப்பு
09. திரு. ச. உசேந்திரன் பதுளை - பசறை
10. திரு. சே. பகீரதன் வவுனியா
11. திரு. T. கலைச்செல்வன் வவுனியா
12. திரு. க. செல்வராஜி கிளிநொச்சி
13. திருமதி. S. நிரஞ்சனாதேவி கலஹா - கண்டி
14. திரு. P. சிவகுமார் வயாவிளான் - யாழ்ப்பாணம்
15. ஜனாப் மு. பா. முகம்மது சாபிர் கிண்ணியா

இலங்கையின் பல பகுதிகளைச் சேர்ந்த 15 ஆரம்பக்கல்வி ஆசிரிய வளவாளர்களால் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ளது

வெளியீடு :- யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
எல்லா புத்தக சாலையிலும் கிடைக்கும்
10-1/5, ஜிந்துப்பிட்டி வீதி கொழும்பு-13. (Trust Complex - 342 Sea Street) தொ.பே.: 077 6258778

# வீணானது பிரேசில் போராட்டம்
## சுவிட்சர்லாந்துடன் சமனிலை


கோல் அடித்த பூரிப்பில் பிலிப் கவுட்னினோ

ஐந்து முறை உலக சம்பியனான பிரேசில் அணி, சுவிட்சர்லாந்துக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமன் செய்தது.

ரஷ்யாவில் நடக்கும் உலக கிண்ண தொடரில் 'இ' பிரிவு லீக் போட்டியில் நெய்மர் தலைமையிலான பிரேசில் அணி, சுவிட்சர்லாந்தை சந்தித்தது.

இதில் பிரேசில் எளிதாக வெல்லும் என நம்பப்பட்டது. இதற்கேற்ப போட்டியின் 20ஆவது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து வீரர் தலையால் முட்டித் தள்ளிய பந்தை, 23 மீ., தூரத்தில் இருந்து பெற்றார் பிரேசிலின் பிலிப் கவுட்னினோ.

அதே வேகத்தில் வலது காலால் இவர் அடித்த பந்து கோல் போஸ்ட் மீது மேலாகச் சென்று போஸ்ட் மீது பட்டு கோலாக மாற, முதல் பாதியில் பிரேசில் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

உலக கிண்ண தொடரில் 1966 முதல் கோல் ஏரியாவுக்கு வெளியில் இருந்து மட்டும் பிரேசில் அணி கோல் அடித்தது 37ஆவது முறையாக நடந்தது.

இரண்டாவது பாதியில் மனம் தளராமல் போராடியது சுவிட்சர்லாந்து அணி. போட்டியின் 50ஆவது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து அணிக்கு 'கோர்னர் கிக்' வாய்ப்பு கிடைத்தது. ஷாக்ரி அடித்த இந்த பந்தை பிரேசில் கோல் ஏரியாவுக்குள் நின்று கொண்டிருந்த ஜுபெர், அந்தரத்தில் உயர்ந்து தலையால் முட்டி கோலாக மாற்றினார். அப்போது தனக்கு முன் இருந்த மிராண்டாவை தள்ளிவிட்டார் என பிரேசில் அணியினர் முறையிட்ட போதும் நடுவர் கண்டு கொள்ள வில்லை. இதனால் ஸ்கோர் 1-1 என சமன் ஆனது.

இதையடுத்து வீறு கொண்டு எழுந்த நெய்மர் பலமுறை கோல் அடிக்க முயற்சித்தார். மறுபக்கம் இவரை பிடித்து கீழே தள்ளுவது, 'ஜெர்சியை' பிடித்து இழுத்து விடுவது என 'பவுல்' செய்வதில் அதிக அக்கறை காட்டினர் சுவிட்சர்லாந்து வீரர்கள்.

நெய்மரை மட்டும் 10க்கும் மேல் 'பவுல்' செய்தனர். இதனால் சுவிட்சர்லாந்தின் மூன்று வீரர்கள் 'மஞ்சள் அட்டை' பெற்றனர்.

இரண்டாவது பாதியில் மட்டும் 16 முறை படையெடுத்த (கோல் முயற்சி) போதும் பிரேசில் அணியினால் கூடுதலாக ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இதனால் 1-1 என போட்டி சமனிலையானது.

கடந்த 1966க்குப் பின் உலக கிண்ண தொடரில் பங்கேற்ற முதல் போட்டியில் தோற்றது இல்லை என்ற பெருமையை தக்கவைத்தது சுவிட்சர்லாந்து.

**13** நேற்று 'டிரா' செய்த பிரேசில் அணி கடந்த 1998 முதல், உலக கிண்ண தொடரில் பங்கேற்கும் 'குரூப்' போட்டிகளில் தோற்காமல் வலம் வருகிறது. 13 போட்டிகளில் 10 வெற்றி பெற்றது. 3 'சமன்' செய்தது.

தவிர 21 உலக கிண்ண தொடரில் களமிறங்கிய முதல் போட்டியில் தோற்றது கிடையாது என்ற பெருமையையும் பிரேசில் தக்கவைத்தது.

# 'பெரு' கோல் அடித்தால்...



தோற்றுப் போனார். இம் முறை உலக கிண்ண

உலக கிண்ண தொடரில் பெரு அணி கோல் அடிக்குமா என பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பெரு நாட்டை சேர்ந்தவர் நிஸ்சு கவுதி. பெரு கால்பந்து அணியின் 'தோழி' என செல்லமாக அழைக்கப்படும் இவர், தென் அமெரிக்காவில் மிக பிரபலம். ஏனெனில் பெரு அணி எப்போதெல்லாம் கோல் அடிக்கிறதோ, உடனே தனது மேலாடையை கழற்றி விடுவார்.

உலக கிண்ண தகுதிச் சுற்றில் வெனிசுலா அணிக்கு எதிராக 'சமன்' செய்த போது ஆடையில்லாமல் 'போஸ்' கொடுத்தார். இரு ஆண்டுக்கு முன் உருகுவே அணி, பெருவை வீழ்த்தினால்... என சவால் விட்டு

தொடரில் பெரு அணி 'சி' பிரிவில் இடம்பெற்றுள்ளது.

முதல் போட்டியில் டென்மார்க் அணியிடம் 0-1 என தோற்றது.

அடுத்து 21 ஆம் திகதி பிரான்ஸ், 26ஆம் திகதி ஆஸியை சந்திக்கிறது. இதில் பெரு கோல் அடிக்கும் பட்சத்தில் நிஸ்சு கவுதி என்ன செய்வார் என எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# ஐரோப்பாவின் போர்க்களம்
## கோல் மழை பொழிந்தது



பனாமா அணிக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில், பெல்ஜியம் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்று சோச்சியில் நடந்த 'ஜி' பிரிவு போட்டியில் பெல்ஜியம், பனாமா அணிகள் மோதின.

இத்தொடரின் கறுப்பு குதிரைகளில் ஒன்று என கூறப்படும் 'ரெட் டெவில்ஸ்' பெல்ஜியம் அணி, ஆரம்பத்தில் இருந்தே பந்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்தது.

முதன்முறையாக உலக கிண்ண தொடரில் களமிறங்கும் பனாமா அணி கடும் சவால் கொடுத்தது. 40வது நிமிடம் லூகாகு அடித்த பந்தை பனாமா கோல் காப்பாளர் பெனெடோ அசத்தலாக தடுக்க முதல் பாதி கோல் எதுவுமின்றி முடிந்தது.

**கோல் மழை**

இரண்டாவது பாதி தொடங்கிய 2ஆவது நிமிடத்தில் (47ஆவது) நிமிடத்தில் டிரைஸ் மெர்டென்ஸ், அடித்த பந்து பெனெடோவை தாண்டி வலைக்குள் சென்றது.

பெல்ஜியம் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இதன் பின் போட்டி முழுவதும் பெல்ஜியம் வசம் வந்தது. 69ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் டி பிருயுன் அடித்த பந்து கோல் போஸ்ட் நோக்கிச் சென்றது.

அருகில் இருந்த லூகாகு அப்படியே கிடைமட்டமாக பாய்ந்து தலையால் முட்டி கோலாக மாற்ற 2-0 என முந்தியது பெல்ஜியம்.

75ஆவது நிமிடம் மீண்டும்

**இரு கோல்களை அடித்த லூகாகு**

மிரட்டிய லூகாகு, சக வீரர் ஹஜார்டிடம் இருந்து பெற்ற பந்தை கோலாக்கினார். கடைசியாக களமிறங்கிய 9 போட்டிகளில் இவர் அடித்த, 9ஆவது கோல் இது. தவிர இத்தொடரில் முதன் முறையாக நேற்று தான் இரண்டாவது பாதியில் மட்டும் மூன்று கோல் அடிக்கப்பட்டன.

இதற்கு பதிலடி தர முயன்ற பனாமா அணியின் முயற்சிகள் 'பனால்' ஆக பெல்ஜியம் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.












# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்
## ஆனி உத்தர திருவிழாவும்
## சகஸ்ர (1008) சங்காபிஷேக நிகழ்வு–2018

முருகன் அடியார்களே!

நிகழும் விளம்பி வருடம் ஆனி மாதம் 06ம் நாள் (20.06.2018) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு சங்குப்பூஜையும் 10.00 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் நடைபெறும். 11.00 மணியளவில் எம்பெருமான் வீதியுலா வருவார்.

**ஆலயத்தில் அன்னதானம் வழங்குதல் சிறப்பாக நடைபெறும்.**

**விஷேட மேளக்கச்சேரி இடம்பெறும்.**

திருவிழா உபயகாரர்கள்
செல்வவிநாயகம் புதல்வர்கள்
பாலேந்திர ஐயர், ரவீந்திரன் ஐயர்

சங்காபிஷேக உபயகாரர்கள்
பொன்னம்பலம் சிவஞானம்
பொன்னம்பலம் கதிர்காமலிங்கம்
(சங்கத்தானை, சாவகச்சேரி.)

எங்கள் மெத்தைவீட்டு கந்தசாமி ஐயர் மடம் தற்போது வழமையான செயற்பாடுகளுடன் தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும் திருமண மண்டப ஒழுங்கும், ஏனைய விழாக்களும் நடைபெற மண்டப ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலும் திருமண வைபவத்திற்கு ஏற்ற உணவுகளை (காலை, மதியம், இரவு) விரும்பிய வகையில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை சந்நிதியான் அடியார்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதம குரு: **உலககுருநாத ஐயர் ரமண ஐயர்**

(4574)

T.P: 0774319786, 021 205 5622
பிரதம குரு: உலககுருநாத ஐயர்
People's Bank valvettithurai,
Account Number: 141-2-001-4-9018959
A/C: 141-1-001-6-0090265

இப்படிக்கு
பிரதம குரு சிவஸ்ரீ ச.கந்தசாமி ஐயர்,
பிரதம குரு க.உலகநாதகுருநாத ஐயர்
ஆலய உரிமையாளர்,
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

# ஐ.தே.கவுடன் ஒன்றிணைந்து செயற்படுவது அரசியல் இருப்புக்கு பாரிய ஆபத்தாகும்

## ஜனாதிபதியை எச்சரிக்கிறார் சு.க. எம்.பி. சுசில்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படுவது அவரது அரசியல் இருப்புக்குப் பாரிய ஆபத்தினை ஏற்படுத்தும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசியல் சூழலில் அனைவரும் எதிர்பார்க்கும் விடயமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காணப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் குறித்து இது வரை உறுதியான தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. மறுபுறம் பொது எதிரணியின் பொது வேட்பாளர் தொடர்பிலும் உறுதியான தகவல்கள் இல்லை.

இந் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரதமரை களமிறக்க அக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அதற்கிணங்க பிரதமர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவது வரவேற்கத்தக்க விடயமாகும். ஏனென்றால் இவரை எதிர்த்து போட்டியிடும் எதிர் வேட்பாளர் நிச்சயம் பெரும்பான்மையான ஆதரவுடன் வெற்றி பெறுவார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படுவது அவரது அரசியல் இருப்புக்கு பாரிய ஆபத்தினை ஏற்படுத்தும். எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மக்கள் ஆதரவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவையும் ஒன்றிணைத்தால் சுதந்திரக் கட்சி பலம்பெறும்.

ஆகவே இதனை நோக்கமாகக் கொண்டே பொது எதிரணியின் கொள்கைகளை ஒன்றிணைத்து இரண்டு தரப்பினரையும் இணைக்கும் பாலமாக நாம் செயற்பட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இனி நுண்கடன் வழங்க முடியாது

### ஏறாவூர்ப்பற்றில் ஏகமனதாக தீர்மானம்



(ஏறாவூர்)

வட்டி விகிதம் குறித்து நிதி நிறுவனங்கள் ஒரு தீர்க்கமான முடிவை அறிவிக்கும் வரை ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவில் நுண்கடன் வழங்க முடியாது என்ற தீர்மானத்தை ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நுண்கடன் தொடர்பான விசேட கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச பகுதியில் நுண்கடன் நிதி வழங்குவது தொடர்பாக நேற்று அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன்தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன்போது பல்வேறு அதிரடித் தீர்மானங்களை பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அறிவித்தார்.

இந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்த நான்கு நிறுவனங்களுக்கு பிரதேசத்தில் கடன் வழங்க அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யாத நிறுவனங்கள், மத்திய வங்கியின் சட்ட திட்டங்களை கடைப்பிடிக்காத நிறுவனங்களுக்கும் குறிப்பாக வலிந்துதவும் நிறுவனமாக பதிவு செய்த நிறுவனங்களுக்கு கடன் வழங்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனங்களில் கடன் பெற்ற பயனாளிகள் தொடர்பான விபரம் பிரதேச செயலாளருக்கு இரண்டு வாரங்களுக்குள் வழங்க வேண்டும். வீடுகளுக்கு சென்று இனி எந்த நிறுவனமும் கடன் அறவிட முடியாது.

கடன் ஒப்பந்தங்கள் குறித்த பத்திரங்கள் தமிழ் மொழியில் இருக்க வேண்டும். வட்டி விகிதம் குறித்து நிதி நிறுவனங்கள் ஒரு தீர்க்கமான முடிவை அறிவிக்கும் வரை ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவில் கடன் வழங்க முடியாது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடன் கட்ட முடியாதவர்களுக்கு அழுத்தங்களை பிரயோகித்து தற்கொலைக்கு தூண்டுவது கொலைக்குற்றமாக கருதி நீதிமன்றத்தை நாட முடியும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் ஒன்பது நிறுவனங்கள் ஒரு குடும்பத்திற்கு கடன் வழங்கியுள்ளதாக இக் கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண் கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைக்கு முயன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாலியல் இலஞ்சம் கோருவதாகவும் குற்றச்சாட்டு இதன்போது தெரிவிக்கப்பட்டது. இரு தயபுரத்தில் இவ்வாறு கடன் வழங்கி பாலியல் இலஞ்சம் கோரிய ஒருவரை கோடரியால் வெட்டி விட்டு பொலிஸில் சரணடைந்த சம்பவமும் இடம்பெற்றது.

மக்களை ஏழையாக்குதல், கடனை திணித்தல், பாலியல் இலஞ்சம் கேட்பதை தூண்டுதல், வீடுகளுக்குச் சென்று கடனை அறவிடுதல், பொது இடங்களில் அனுமதி இன்றி கூட்டம் வைத்தல், கிராம சேவை உத்தியோகத்தர்களின் அனுமதி இன்றி கடன் வழங்குதல், வருமானத்திற்கு அதிகமாக கடன் வழங்குதல், நோக்கமற்ற கடன்வழங்கிகுடும்பங்களைசீரழித்தல், அதிக வட்டி அறவிடுதல், ஒரு குடும்பத்திற்கு பல நிறுவனங்கள் கடன் வழங்குதல், கடன் வழங்கும் ஒப்பந்தம் குறித்து ஆராய வேண்டும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


# கண்ணீர் அஞ்சலி



அமரர். நடராசா-கமலாம்பிகை

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.-1, அ.த.க. பாடசாலையின் அதிபர் திருமதி. அஞ்சனா ரவிச்சந்திரன் அவர்களது அன்புத் தாயார் அமரர். நடராசா-கமலாம்பிகை அவர்கள் 16.06.2018 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் வேண்டுகின்றோம்.

(க-3005)

கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்


## இராசி பலன்

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தனவரவில் இருந்த தடைகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கடகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, புத |
| | இராசி பலன் | | ராகு, சுக். |
| செவ், கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம் | | |
| சனி | | குரு | |

19.06.2018
ஆனி 05, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 12.23 மணிவரை
மகம் முற்பகல் 8.21 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை

வளவன்

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள்.

**கன்னி:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, விரதங்களில் நம்பிக்கை கூடும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

# காங்கேசன்துறையில் கப்பல் திடீரென தீப்பிடித்தது



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதுடன் குறித்த கப்பலில்எழுந்த தீயை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டனர். குறித்த கப்பல் திருத்த வேலை காரணமாக பல மாதகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது கப்பல் இனந் தெரியாதோரால் எரிக்கப்பட்டதாக கப்பலின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (இ-4-9-60)

# யர்ர் தடுத்தாலும் எனது மக்கள் சேவை தொடரும்

## அங்கஜன் உறுதி

(கரணவாய்)

யார் தடுத்தாலும் மக்கள் எங்களுடன் நிற்கும் போது நிச்சயமாக மக்களுக்கான சேவையை மேலும் மேலும் செய்யலாம் என விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அங்கஜனின் ஆதரவாளர்களால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி சபாநாயகராக வந்திருந்தால் வரலாற்றில் மட்டுமே இடம் பிடித்திருப்பேன். ஆனால் இப்பதவி மக்களுடைய மனதிலே இடம் பிடிப்பதற்கான வழி.

இதற்காக பிரதி சபாநாயகர் பதவியை தடுத்தவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுகிறேன்.

மக்களின் ஆதரவு இருந்ததாலேயே இப்பதவி எனக்கு கிடைத்தது. பதவி என்பதனை விட, பொறுப்பு கிடைத்திருக்கிறது. மக்களுடைய தேவைகள், அபிலாசைகள், பிரதேச குறைபாடுகளை தெரிந்து ஜனாதிபதி எனக்கு கொடுத்த பதவியாகவே இதை நான் பார்க்கின்றேன்.

எதிர்வரும் இரண்டு வருடத்தில் விவசாய மக்கள், வடக்கு மக்களுக்காக முழுமையாகப் போராட வேண்டும் இதற்கு உங்களது ஒத்துழைப்பு இல்லாமல் வெற்றி பெற முடியாது. இதுவரை வேலை செய்ததை விட இனிவரும் இரண்டு வருடங்களுக்கு அதிகமாக வேலை செய்ய முயற்சிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-60)




# வடமாகாண கைத்தொழில் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தினால் வருடாந்தம் சிறுகைத் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களுக்குரிய சந்தை வாய்ப்பு உற்பத்தித்திறன் விருத்தி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வட மாகாண கைத் தொழில் கண்காட்சி மற்றும் போட்டி என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இவ் வருடமும் எமது மாகாணத்தின் கண்காட்சியானது ஜூலை நாலாம் வாரத்தில் யாழ். மாவட்டத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கலந்துரையாடலொன்று இன்று 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள முதியோர் இல்லவளாகத்தில் வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறும் என வட மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் க. ஸ்ரீமோகனன் அறிவித்துள்ளார். (இ)

# மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் சோலை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-29)

# தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் விரிவாக்கல் திட்டங்கள் சாவகச்சேரியில்





(சாவகச்சேரி)

தென்னை பயிர்ச் செய்கை சபையின் இவ்வருடத்திற்குரிய விரிவாக்கல் வேலைத் திட்டங்கள் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள குடமியன், நுணாவில் மேற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு போன்ற கிராமங்களில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் கடந்த 12 ஆம் திகதி விரிவாக்கல் வேலைத்திட்டங்களும் கைத்தொழில் சார் கலந்துரையாடலும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் சக்தி Agro நிறுவனப் பணிப்பாளர் ஜனன், கப்ருக சங்க உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ந்த 03 நிகழ்வுகளிலும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்தியேந்திரன் மூலம் விரிவாக்கல் விளக்கவுரைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர் இந்நிகழ்வின் நோக்கம் பிரதேசத்திலுள்ள தேங்காய் மட்டைகளுக்கு உரிய விலையை நிர்ணயித்து அப்பிரதேசத்திலுள்ள தொழிற்சாலையை அபிவிருத்தி செய்து வேலைவாய்ப்புக்களை வழங்குவதே ஆகும். தென்னை பயிர்ச்செய்கை சபையும் சக்தி Agro நிறுவனமும் இணைந்து செயற்படுத்தும் இவ் வேலைத்திட்டத்திற்கு மக்கள் ஒத்துழைத்து தேங்காய் மட்டைகளை சேகரித்து தொழிற்சாலைக்கு வழங்க வேண்டும். தென்னை வளர்ப்பாளர்கள் இதற்கான ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் இத் தொழிற்சாலை மூலம் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செய்யப்படலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த சக்தி Agro நிறுவனப் பணிப்பாளர், இத்தனியார் நிறுவனத்தின் இலாபம் பெரிதெனினும் இத்தொழிற்சாலை மக்களுடைய பங்களிப்போடும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் ஒத்துழைப்போடும் நிறுவப்பட்டு இப் பிரதேசத்திலுள்ள மூலப் பொருட்களை நம்பி வெற்றிப் பாதையை நோக்கி பயணிக்கின்றது. இத் தேங்காய் மட்டைகளை தகுந்த விலையில் கொள்வனவு செய்து தொழிற்சாலை அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

இக்கலந்துரையாடலில் சங்கங்களுடன் ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. தேங்காய் மட்டைகளுக்கு தீர்மானித்த விலை 01 மாதத்திற்கு செல்லுபடியாகும். இதற்கமைய தமது சங்கங்கள் ஊடாக சக்தி Agro நிறுவனத்திற்கு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர். எமக்குரிய மூலப்பொருள் எமது பிரதேசத்தில் பயன்படுத்த வேண்டுமென வும் புத்தளம், குருநாகல் போன்ற பிரதேசங்களுக்கு எமது மூலப் பொருட்களை அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும் இதற்கமைய அனைவரும் ஒன்றிணைந்து தென்னைசார் தொழிற்சாலைகளை நிறுவ வேண்டுமென சுட்டிக்காட்டினார். (இ)

# மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி இந்துக் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1,2,3,4 பிரிவுகளுக்கு நடத்தப்படவுள்ளது.

தரம் 1,2 பிரிவிற்கு "முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்", "பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்" ஆகிய இரு திருமுறைகளும்,

தரம் 3, 4 பிரிவிற்கு "பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்", "வான் ஆகி! மண் ஆகி! வளி ஆகி!" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜூன் 23 ஆம் திகதியாகும். பரிசில்கள் ஜூலை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப்போட்டியில் பற்குபற்ற விரும்புவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலரும், சமய பிரசாரகருமான சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ)







ஊரெழு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் "விளையாடி மகிழ்வோம்" நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது விருந்தினர்கள் மாலை அணிவித்து சிறார்களின் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் நிலையத் தலைவர் சி.இளங்கோ தலைமையுரையாற்றுவதையும் வடமாகாண கல்வி அமைச்சின் பிரத்தியேக செயலாளர் ந.அனந்தராஜ், யாழ். மாவட்ட செயலக முன்பள்ளி இணைப்பாளர் அமலன் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறார்களின் தடை தாண்டல் நிகழ்வையும் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சக்தி)


















யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகக் கற்கைகள் பிரிவு நடத்தும் ஒளிப்பட கண்காட்சியும், விபரணப்படங்கள் திரையிடலும் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. 'இருளென்பது குறைந்த ஒளி' என்னும் தொனிப்பொருளில் ஒளிப்படக் கண்காட்சி முதலில் ஆரம்பமாகியதை தொடர்ந்து, விபரணப்படங்கள் திரையிடல் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றது. இந்த ஒளிப்பட கண்காட்சியில் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் தெரிவுசெய்யப்பட்ட 200 க்கும் அதிகமான ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊடகக் கற்கைகள் மாணவர்களால் உருவாக்கப்பட்ட விபரணப் படங்களும் திரையிடப்பட்டன. இந்த நிகழ்வில் கலைப்பீடாதிபதி கலாநிதி. கே. சுதாகர் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மாணவர்கள் காண்காட்சியை பார்வையிட்டனர். (படங்கள்:- பொ. சோபிகா)

# மலையக சிறுமி கடத்தல் விவகாரம் எட்டுப் பேருக்கும் நேற்றுப் பிணை

(ஹற்றன்)

தலவாக்கலையில் சிறுமி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் தவிசாளர் அசோக்க சேபால உட்பட எட்டுப் பேரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



அதன்படி, ஒவ்வொருவருக்கும் தலா 10 இலட்சம் ரூபா வீதம் இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

தலவாக்கலையில் 5 வயது சிறுமி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, அவர்களுக்கு பிணை வழங்கிய நீதவான், வெளிநாடு செல்லத் தடை விதித்தார்.

அத்துடன் இந்த வழக்கு தொடர்பான விசாரணையை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கடந்த 4 ஆம் திகதி சிறுமி கடத்தல் விவகாரம் தொடர்பில் தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தலைவர் உள்ளிட்ட 4 பேர் கைதுசெய்யப்பட்ட நிலையில், மறுநாள் சிறுமியின் தாய் உள்ளிட்ட மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வேலை தேடும் பட்டதாரிகளுக்கு யாழில் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தி உதவியாளர் நியமனம் தொடர்பாக வடக்கில் உள்ள வேலைதேடும் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நடைபெறும்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் அபிவிருத்தி உதவியாளருக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொண்ட வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளை குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-9)

# பிள்ளையார் ஆலயத்திலிருந்து குதிரை வாகனம் நேற்று திருட்டு

## சீ.சீ.ரி.வி. கமராவில் பதிவு

(கரணவாய்)

ஆலயம் ஒன்றிலிருந்து குதிரை வாகனம் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் நேற்று திங்கட்கிழமை காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் வடமேற்கு திக்கம் பகுதியிலுள்ள துளாய் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த குதிரை வாகனமே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. நேற்று திங்கட்கிழமை அதிகாலை வாகனம் ஒன்றில் வந்தவர்கள் குதிரை வாகனத்தை திருடிச் செல்வது அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சீசீரிவி கமராவில் பதிவாகியுள்ளது. இதன் அடிப்படையில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)


## பொருட்கள் ஏலம் விடல்

மேதுபாடசாலை வளாகத்தில் பாவனைக்கு தவாத சில பொருட்கள் ஏலம் விடப்படவுள்ளன.
காலம்:- 20.06.2018 புதன்கிழமை
நேரம்:- காலை 10.30
அதிபர், யா/ சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, நீர்வேலி.
(45615)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3ஆம்பாதம்
கி.பா: 39 செவ் 8 இல்
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR
தொ.இ: B/8692

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3 ஆம்பாதம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:ACCA
முகாமையாளர் தனியார்
தொ.இ: B/8693

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L
அவுஸ்ரேலியா PR
தொ.இ: B/8694

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 21
உயரம்: 175cm
தகைமை/தொழில்: O/L
அவுஸ்ரேலியா PR
தொ.இ: B/8697

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3 ஆம்பாதம்
கி.பா: 23 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc MSc
அவுஸ்திரேலியா PR
தொ.இ: G/6902


பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 2 ஆம் பாதம்
கி.பா: 31
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc BIT அரச தொழில்
தொ.இ: G/7480

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3ஆம்பாதம்
கி.பா: 16
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
தொ.இ: G/8114

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மகம் 2ஆம் பாதம்
கி.பா: 16
தகைமை/தொழில்:A/L அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: G/8115

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.













"பிள்ளைகளைப் பாதுகாப்போம்" எனும் தேசிய செயற்றிட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட மாநாடு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஆரம்பமான போது... (படங்கள்:- கண்டாவளைச் செய்தியாளர்)

## 'மின்சாரவேலி போடு; காணிகளை வந்துபார்'

# யானைகளின் அச்சுறுத்தலுக்கு எதிராக நீலியாமோட்டை மக்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நீலியாமோட்டை பிரதேசத்தில் காட்டு யானைகளினால் அச்சுறுத்தல் மற்றும் பயன் தரும் மரங்கள் அழிக்கப்படுதலில் இருந்து தமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் முகமாக அப்பகுதி மக்கள் நீலியாமோட்டை வீதியை தடை செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் "மின்சார வேலி போடு, மிகுதி வாழ்வாதாரங்களைக் காப்பாற்ற உதவு, அழிந்தவை எல்லாம் அடகு வைத்தவையல்ல மீட்பதற்கு, கண்களைத் திறந்து பார், எங்கள் காணிகளை வந்து பார்" போன்ற பல்வேறு சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் ஏந்தியவாறு வீதியினையை மறித்து ஆர்ப்பாட்டத்தை நேற்றையதினம் முன்னெடுத்திருந்தனர்.





சுமார் ஒரு மணித்தியாலயமாக ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற நிலையில் அவ்விடத்திற்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடியதுடன், இதற்கான தீர்வை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்ததன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் செட்டிகுளம் உதவிப் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## 'பிள்ளைகளை பாதுகாப்போம்'

# கிளிநொச்சியில் மாவட்ட மாநாடு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் "பிள்ளைகளைப்பாதுகாப்போம்" எனும் தேசிய செயற்றிட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

"தேசத்தின் உயிர் நாடிகளான பிள்ளை சமுதாயத்தை பாதுகாத்தல் மற்றும் அவர்களது உடல்,உள விருத்திக்குச் சிறந்த சூழலை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு பிள்ளைகளைப் பாதுகாப்போம்" எனும் தேசிய செயற்றிட்ட மாநாடு நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டாரநாயக்கா, விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட செயலாளர் றோகண திசாநாயக்கா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், விவசாய அமைச்சர் க.சிவநேசன், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை மாணவர்களிடம் கையளித்தல், வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களிலும் தடுப்பு இல்லங்களிலும் தங்கியிருக்கும் சிறுவர்களுக்கு சிறந்த சூழலை உருவாக்கும் நோக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் இல்லங்களையும் தடுப்பு இல்லங்களையும் நவீனமயப்படுத்தி புனரமைக்க நிதி வழங்குதல், விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் வடக்கு மாகாணத்திலுள்ள 25 பாடசாலைகளுக்கு விசேட பாதை வசதி உள்ளிட்ட பல்வேறு வேலைகளை முன்னெடுப்பதற்கு




நிதி வழங்குவதல், சிறுநீரக நோயிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்காக சுத்தமான குடிநீர் வசதியற்ற ஆயிரம் குடும்பங்களுக்கு நீர் சுத்திகரிப்பு உபகரணங்களை வழங்குதல், முன்பள்ளிப் பருவ விருத்திக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முன்பள்ளிகளுக்கு நூல்கள், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், பாதுகாப்பற்ற சூழலில் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு நிதி வழங்கும் பல்வேறு செயற்றிட்டங்களை ஜனாதிபதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் பாடசாலை மாணவர்கள்,அதிபர்கள் ஆசிரியர்கள், சிறார்கள், பொது மக்கள்- எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைமைக்காரியாலயம் திறப்பு



(குருமன்காடு)

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் வன்னி மாவட்ட தலைமை காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா வெளிக்குளம் பகுதியில் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் வன்னி மாவட்ட தலைமை காரியாலயம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான வி.ராஜதுரை, மத்திய மாகாண சபை உறுப்பினர் திலீப் ஆகியோர் கலந்து கொண்டு ஜனநாயக மக்கள் காங்கிரஸின் வன்னி மாவட்ட தலைமை அலுவலகத்தை நாடாவெட்டி திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் சர்வமதத்தினர், பொதுமக்கள் கட்சியின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# வன்னேரிக்குளம் பிரதான வீதியை புனரமைப்பதன் மூலம் சுற்றுலா மையத்தை சீராக செயற்படுத்த முடியும்

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பிரதான வீதியை புனரமைப்பதன் மூலமே சுற்றுலா மையத்தை சீராக செயற்படுத்த முடியும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் கடந்தாண்டு நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையம் தற்போது கவனிப்பாரற்று பறவைகள், விலங்குகளின் உறைவிடமாகவும் சமூகவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறும் இடமாகவும் காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதாவது, வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் கீழான குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியின் கீழ் சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்தாண்டு மே மாதம் 27 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.




இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையம் கவனிப்பாரற்று பற்றைக்காடுகள் மண்டியும் அதன் கட்டுமானங்கள் சிதைந்தும் காணப்படுவதுடன் மாதாந்தம் கூடுதலான சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடியதாகவும் அதிக வருமானத்தை ஈட்டக்கூடியதாகவும் இருக்கும் என குறிப்பிடப்பட்டபோதும் இன்று பறவைகள், விலங்குகளின் உறைவிடமாகவும் கவனிப்பாரற்ற நிலையில் சமூகவிரோதச் செயல்கள் இடம்பெறும் இடமாகவும் காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக வுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் குறித்த சுற்றுலா மையத்திற்குச் செல்லும் பிரதான பாதை இதுவரை புனரமைக்கப்படவில்லை. அந்த வீதியைப் புனரமைப்பதன் மூலம் குறித்த சுற்றுலா மையம் சீராகச் செயற்படும். அந்த பாதையை புனரமைக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு உள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். குறித்த பாதை புனரமைத்தவுடன் வன்னேரிக்குளம் சிறந்த இடமாக விளங்கும் என குறிப்பிட்டுள்ளார். (2-315)

# தமிழ் வளர்த்த சான்றோர் விழாவும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கத்தினால் கரைச்சிக் கோட்டத்திற்கான தமிழ் வளர்த்த சான்றோர் விழாவும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் த.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கரைச்சிக் கோட்ட மட்டத்தில் தரம் 2 முதல் உயர்தரம் வரையில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட எழுத்து, பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

தமிழ் எழில் எனும் இதழ் வெளியிடப்படவுள்ளது. குறள் இசை, வரவேற்பு நடனம், நாட்டுப்புறக்கலைகள் ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

கோட்ட நிகழ்வுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் மிக விரைவில் மாவட்ட மட்டப் போட்டிகள் நடைபெற்று மாவட்ட விழாவும் நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வரட்சியினால் சிறுபோகச்செய்கை பாதிப்பு; கால்நடைகளும் குடிநீருக்கு அலைவு



(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில், யூனியன்குளம் ஆகிய பகுதிகளில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதுடன், கால்நடைகளும் தண்ணீருக்காக அலையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக அக்கராயன்குளம் உள்ளிட்ட குளங்களின் கீழான சிறுபோகச்செய்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வரட்சியினால் ஏனைய பயிர்ச்செய்கைகளும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவைதவிர, தற்போது கோணாவில், யூனியன்குளம், அக்கராயன் ஆகிய இடங்களில் குடிநீருக்கான தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதாவது, இப்பகுதிகளில் நிலவும் வரட்சி காரணமாக குடிநீர்க் கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றன.

இவ்வாறான வரட்சி நிலைமை காரணமாக தமது வாழ்வாதார தேவைகளுக்காகவும் வருமானத்திற்காகவும் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கைகளும் அழிவடைந்து வருகின்றன.

அத்துடன், கால்நடைகள் மற்றும் ஏனைய பிராணிகளும் நீர் தேடி அலையும் அவலநிலை காணப்படுகின்றது.

மேற்படி பிரதேச மக்கள் வரட்சியினால் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் நீண்ட தூரத்திற்குச் சென்று தமக்கு தேவையான தண்ணீரைப்பெற்றுக்கொண்டிருக்கும் நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (2-315)

# ஐந்து மாதிரி கிராமங்களில் கொத்தணி வீடமைப்புத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 5 மாதிரி கிராமங்களில் கொத்தணி வீடமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாதிரி கிராமங்களின் வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இதுவரை 14 வரையான மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பூநகரிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஐந்து மாதிரி வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, தேசிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரின் விசேட பணிப்பின் பேரில் இவ்வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்படி செட்டியகரை வெளியில் 18 வீடுகளும் நேரடம்பன் பிரதேசத்தில் 17 வீடுகளும் சின்னப் பல்லவராயன் கட்டுப்பகுதியில் 10 வீடுகளும் மட்டையர்குடாவில் 13 வீடுகளும் முழங்காவில் பகுதியில் 14 வீடுகளும் என மொத்தமாக 72 வீடுகளுமாக தலா ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# கல்விசார் அபிவிருத்திகளுக்கு 48மில்.ரூபா நிதியொதுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விசார் அபிவிருத்திகளுக்கு இவ்வாண்டில் 48.28 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்டச் செயலகப்புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திகளில் பல்வேறு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விசார் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறுபட்ட தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆளணித் தேவைகள் என்பதுடன் பௌதீக தேவைகளும் அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக முழங்காவில் தேசிய பாடசாலை உள்ளிட்ட பாடசாலைகளில் போதிய கட்டட வசதிகள் இன்மை, ஆசிரியர் விடுதிகள் இன்மை போன்ற பௌதீக தேவைகள் காணப் படுகின்றன என பல்வேறு தரப்புக்களும் சுட்டிக் காட்டின்றன.

இந்நிலையில் இவ்வாண்டு கல்விசார் அபிவிருத்திக்கு 48.28 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலகத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2015ஆம் ஆண்டில் 110.27 மில்லியன் ரூபாவும் 2016ஆம் ஆண்டில் 690.86 மில்லியன் ரூபாவும் 2017ஆம் ஆண்டில் 222.97 ரூபாவும் கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



முல்லைத்தீவு - கள்ளப்பாடு-வடக்கு றோயல் முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டு விழா அண்மையில் கள்ளப்பாடு வடக்கு பொதுநோக்கு மண்டப வளாகத்தில் நடைபெற்றது. விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய இந்நிகழ்வின் விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், முன்பள்ளிகளின் உதவிக்கல்விப் பணிப்பாளர் கு.சிவசுப்பிரமணியம், சிவில் பாதுகாப்பு இணைப்பாளர் க.சிவநேசன், முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி.சி.கலாமலர், சிவில் முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி.பி.சந்திரகலா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# சாதாரண விடயங்களுக்குக்கூட போராடியே எமது உரிமைகளைப் பெறவேண்டியுள்ளது

## தமிழரின் நிலை குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் கவலை



(மாங்குளம்)

இன்றைய நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் தேவைகள் அனைத்தும் போராடிப் பெறவேண்டிய ஒரு கட்டாயத்திலேயே அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய முறையான உரித்துக்களைக் கூட கையளிப்பதற்கு அரசாங்கத்தினர். பின்னிற்கின்றார்கள். ஒவ்வொரு சாதாரண விடயங்களுக்குக் கூட போராடியே எமது உரிமைகளைபெறவேண்டிய நிலையில் நாம் இருந்து வருகின்றோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கவலையுடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடமாகாணத்திற்கான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மத்திய அலுவலகம் நேற்று மாங்குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் கிளிநொச்சி நகருக்கு அண்டிய பகுதியில் செயற்பட்டுவந்த இந்த மத்திய அலுவலகம் இன்றிலிருந்து மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் புதிய கட்டடத் தொகுதியில் இயங்க இருப்பது வரவேற்கத்தக்கது. இன்று திறந்து வைக்கப்பட்ட இந்த புதிய கட்டடத் தொகுதி தொடர்பான விபரங்களை தந்துதவுமாறு கோரப்பட்ட போதும் அதனை சமர்ப்பித்தவர்கள் தமது திணைக்களத்தின் திட்டமுன்மொழிவு ஒன்றை அனுப்பிவிட்டு தமது கடமைகள் முடிந்துவிட்டதாக அமர்ந்துவிட்டார்கள். பொறுப்பு வாய்ந்த திணைக்கள உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் முனைப்புடன் செயற்படுகின்ற போது அத் திணைக்களம் வினைத்திறன் மிக்க திணைக்களமாக மிளிரும் என்பதில் ஐயம் இல்லை. நீர்ப்பாசனத் திணைக்களத்தைப் பொறுத்தவரையில் அது வட மாகாணத்தின் மத்திய பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள மாங்குளம் பகுதியில் அமைந்திருப்பதே சாலச்சிறந்தது என்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே இத் திணைக்களம் மாங்குளம் பகுதிக்கு இடம் மாற்றப்பட்டது. யாழில் பிறந்து வளர்ந்த அலுவலர்கள் சிலர் வன்னிக்குள் காரியாலயங்கள் அமைவது ஒரு வதை என்றே நினைக்கின்றார்கள். வாழ்க்கை பூராகவும் கூண்டொன்றுக்குள் முடங்கிக் கிடக்கவே ஆசைப்படுகின்றார்கள். அந் நிலை மாற வேண்டும்.

சுமார் 42.55 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் எமது முன்னைநாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் விவசாய அமைச்சராக இருந்த காலத்தில் நடைபெற்றதாக ஞாபகம். நீர்ப்பாசனத் திணைக்களத்தைப் பொறுத்தவரையில் அதன் அமைவிடம் மாங்குளத்தில் இருப்பதே சாலப் பொருத்தமானது. ஏனெனில் இப் பகுதியில் நீர்ப்பாசனக் குளங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கிளிநொச்சியில் இரணைமடு குளம் நீர்ப்பாசனத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற போதும் மாங்குளம் பகுதியில் பல குளங்கள் நீர்ப்பாசனக் குளங்களாக காணப்படுவதால் அவற்றை நேரில் சென்று பார்வையிடுவதற்கும் நீர்ப்பாசன செயற்பாடுகள் முறையாக நடைபெறுகின்றதா என்பதனை பார்வையிடுவதற்கும் இவ்விடம் இலகுவானதாக அமையும் என எண்ணுகின்றேன்.

இன்றைய எமது சீதோஷ்ண நிலைகளுக்கு அமைவாக வட பகுதியில் பெறப்படுகின்ற ஒவ்வொரு துளி நீரும் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். வட பகுதிக்கு வருடாந்தம் கிடைக்கப் பெறுகின்ற சுமார் 1250 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கூடத் தற்போது கிடைக்கப் பெறுவதில்லை என தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் கிடைக்கின்ற நீரை முறையாகத் தேக்கிவைக்காது வீணாக கடலில் சேர அனுமதிப்பது மிகக் குறுகிய காலத்தில் எமது பகுதிகள் வரண்ட பிரதேசங்களாக மாறுவதற்கு நாமே வழி சமைத்ததாக அமையும். முன்னரே மன்னன் பராக்கிரமபாகு ஒரு சொட்டு நீரைக் கூட கடலில் கலக்க விடாதீர்கள் என்று சொல்லிச் சென்று விட்டான். ஆனால் இன்றைய காலகட்டத்தில் நாங்கள் பழைமையையும் மதிப்பதில்லை நவீன ஆலோசனைகளையும் பின்பற்றுவதில்லை. பின்னணியில் சிலரின் சுயநலம் காணப்படுகின்றது என்று புலப்படுகிறது.

இப் பகுதிகளில் கூடுதலான நிலங்கள் விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடியதாக காணப்படுகின்ற போதும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் வன இலாகா, வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், கனிய வளத் திணைக்களம், கடலோரப் பாதுகாப்புச் சபை போன்ற திணைக்களங்கள் கூட்டாக இணைந்து பல செயற்றிட்டங்களுக்கு முட்டுக்கட்டைகள் கொடுத்து வருகின்றன. அரச கொள்கைகளுக்கு அமைவாக பல காணிகள் காடுகளாக பராமரிப்பதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. காடுகள் பல வகைப்படும். அவற்றுள் சரணாலயங்கள் இருக்கலாம். தேசியப் பூங்காக்கள் இருக்கலாம். வெறும் அடர் காடுகளும் இருக்கலாம். சரணாலயங்களுக்கு ஊடாக மக்கள் செல்லலாம். ஆனால் தேசிய பூங்காக்களுள் (National Parks) நுழைவதென்றால் அனுமதி பெற வேண்டும். வன இலாகா தேசிய பூங்காக்களை எமது பிரதேசங்களில் ஏற்படுத்தி எமது மக்களை அவற்றுள் உள் நுழைய விடாமல் தடுக்கப்பார்ப்பதாகத் தெரிகின்றது. இத் திணைக்களத்தின் நடவடிக்கைகளின் நிமித்தம் எமது காடுகளும் சரணாலயங்களும் தேசியப் பூங்காக்களும் அவற்றின் அதிகாரமும் கட்டுப்பாடும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் தொடர்ந்து இருந்து வருகின்றது. எமது காடுகளில் என்ன நடக்கின்றது என்பது எமக்குத் தெரிவதில்லை. அண்மையில் வெலி ஓயா எனப்படும் மணலாறு பிரதேசத்தின் காட்டுக்குள் அணையொன்று கட்டி இருப்பது கட்டி பல மாதங்களுக்குப் பிறகே எமக்குத் தெரிய வந்துள்ளது. யார் கட்டுனார்கள் என்பது புதிராக இருக்கின்றது என்று அறிகின்றேன்.

ஒரு நாட்டில் காணப்பட வேண்டிய காடுகளின் அளவுகள் அதன் நியமங்கள் என்பன முறையாக கடைப்பிடிக்கப்படல் வேண்டும். எனினும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான காடுகளை வடபகுதியில் பாதுகாத்து வைத்திருக்க அரசாங்கம் முனைகின்றது. மற்றைய மாகாணங்களில் பல காடுகள் வெட்டப்படுகின்றன. வடக்கில் அவ்வாறு இல்லாது இழந்த காடுகளை ஈடு செய்ய எமது காணிகள் மற்றும் வனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது இப் பகுதியில் வாழுகின்ற மக்களின் சுயஉரிமைகளை மீறுவதாகவும் அமைகின்றது. எமது காடுகள், காணிகள் ஆகியன எமக்கே உரியவை. அவை முழுமையாக எமது மக்களுக்கே கையளிக்கப்பட வேண்டும். எமது காடுகளையும் வன ஜீவராசிகளையும் பாதுகாக்கவும் பரிபாலனம் செய்யவும் மாகாணத்திற்கு வெளியில் இருந்து அலுவலர்களைக் கொண்டுவருவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

அன்பார்ந்த உத்தியோகத்தர்களே, அதிகாரிகளே! இன்றைய நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களின் தேவைகள் அனைத்தும் போராடிப் பெறவேண்டிய ஒரு கட்டாயத்திலேயே அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய முறையான உரித்துக்களைக் கூட கையளிப்பதற்கு பின்னிற்கின்றார்கள் அரசாங்கத்தினர்.

ஒவ்வொரு சாதாரண விடயங்களுக்குக் கூட போராடியே எமது உரிமைகளை பெற வேண்டிய நிலையில் நாம் இருந்து வருகின்றோம். இந் நிலையில் எமது மக்களுக்கு எம்மால் வழங்கப்படக்கூடிய சேவைகளையாவது அவர்கள் திருப்திப்படக் கூடிய வகையில் அவர்களின் எதிர்பார்ப்பை விஞ்சியதாக நீங்கள் வழங்க உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் விநயமாக வேண்டிக் கொள்கின்றேன்.


அண்மையில் பத்திரிகையிலும் ஊடகங்களிலும் வெளிவந்த ஒரு செய்தியில் இராணுவத் தளபதி ஒருவரின் செயலை பாராட்டிக் கௌரவித்து அவருக்கு மலர் மாலைகள் அணிவித்து பல்லக்கில் ஏற்றிவந்து விடை கொடுத்து அனுப்பியதாக செய்திகள் வெளிவந்தன.

அவர்கள் அவ்வாறு நடந்து கொள்வதற்கு இயல்பாகவே அந்த அலுவலர் அவ்வாறான நல்ல குணநலன்களைக் கொண்டிருந்தாரா அல்லது அவ்வாறு இயங்குமாறு பணிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய அவர்கள் செயற்பட்டார்களா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவரால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு செலவிடப்பட்ட நிதிகள் எங்கிருந்து வந்தன என்பன பற்றி எதுவுமே கூறப்படவில்லை. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எம்மால் ரூபா 6000/- வழங்கப்பட்டு வருகின்றன. CSD ரூபா 30000/- இற்கு மேலாக வழங்கி வந்துள்ளது. இந் நிதி இதற்கென இராணுவத்திற்கு ஒதுக்கி வைத்த பணமாக இருக்க முடியாது. இவ்வாறான செலவுகளில் வெளிப்படைத்தன்மை இல்லாததால் இராணுவம் திட்டமிட்டே ஐந்து மடங்கு சம்பளம் கொடுத்து எமது மக்களை விலைக்கு வாங்குகின்றதோ என்று எண்ண வேண்டியுள்ளது. அவர்களுக்கான மேலதிக பணம் எங்கிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை இராணுவம் விபரிக்க வேண்டும். இந்த நிதிகள் வடமாகாண சபைக்கு வழங்கப்பட்டிருப்பின் அல்லது வடமாகாண சபையின் ஒத்திசைவோடு மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் எம் மக்களை விலைக்கு வாங்கும் ஒரு கைங்கரியமாக அது அமைந்திருக்காது.


யுத்த காலப் பகுதியில் எமது உறவுகளை முதியவர், குழந்தைகள், பெண்கள், இளைஞர், யுவதிகள், நோய்வாய்ப்பட்டவர்கள் என்ற எதுவித வேறுபாடுகளோ தயவுதாட்சண்யமோ இன்றி கொத்துக் கொத்தாக கொன்று குவித்த நிகழ்வுகளை நேரில் பார்த்த எவருக்கும் அவை மறந்து போய்விட நியாயமில்லை. அவ்வளவு உயிர்களையும் காவு கொள்வதற்கு தாம் சார்ந்ததொரு அமைப்பு காரணமாக இருந்ததே என்ற கவலை குறித்த இராணுவ அலுவலருக்கு இருந்ததோ நான் அறியேன். இருந்திருந்தால் அந் நினைவு வாழ்நாள் முழுவதும் அவரை வாட்டி வதைக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதனடிப்படையில் தமது தவறுகளை சீர் செய்வதற்கும் அல்லது இறைமன்றாட்டம் மேற்கொள்வதற்குமாக இவ்வாறான தார்மீக சிந்தனைகள் அந்த அலுவலரிடம் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என்பதை நாம் உணர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மல்லாகத்தில் இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு

## மனிதவுரிமை ஆணைக்குழு நேரில் விசாரணை







(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய பணிப்பாளர் கே. கனகராஜ் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பா. சுதர்சனின் உறவினர்களிடமும், சம்பவத்தை நேரில் கண்ட சிலரிடமும் அவர்கள் விசாரணையை மேற்கொண்டிருந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நேற்றும் பதற்றமான நிலை காணப்பட்டதுடன் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## தோல்வி பயத்தால் மாகாணத்தேர்தல் ஒத்திவைப்பு

# ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நகர்ந்து வருகிறது நல்லாட்சி

## மகிந்த அணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான தேர்தலை இவ்வருடம் நடத்தினால் தோல்வியடைவோம் என்பதை அறிந்து மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்து, நேரடியாக 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான நகர்வுகளை அரசாங்கம் ஆரம்பித்து வருகிறது என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

மாகாணசபைத் தேர்தலை 50 இற்கு 50 என்ற முறையில் அதாவது விகிதாசார தேர்தல் முறையில் நடத்த வேண்டும் என ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதற்கிணங்க விகிதாசார மற்றும் தொகுதி வாரி முறையிலாக 50 இற்கு 50 முறைக்கு பாராளுமன்ற அனுமதி கோரப்பட்டதுடன் அதற்கான பாராளுமன்ற அனுமதியும் கிடைத்துள்ளது. அதேபோன்று மாகாண சபை தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கையை பற்றி சுட்டிக்காட்ட வேண்டியதும் அவசியமாகும். மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் எல்லை நிர்ணய அறிக்கைக்கான அனுமதி இது வரையில் கிடைக்கப் பெறவில்லை. எல்லை நிர்ணய அறிக்கைக்கான அனுமதி கிடைக்காத வரை தேர்தலை நடத்த முடியாது.

தேர்தலை நடத்தும் முறை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இருவேறான கருத்துக்களே நிலவி வருகின்றன. ஒருசிலர் புதிய தேர்தலை வலியுறுத்துகின்றனர். மற்றுமொரு சிலர் பழைய முறையினை வலியுறுத்துகின்றனர். இவ்வாறான நிலையில் மாகாண சபை தேர்தலை டிசெம்பரில் நடத்துவதென்பது கடினமாகும்.

மேலும் மாகாண சபை தேர்தல் இவ்வருடத்தின் இறுதியில் இடம்பெறுமானால் கட்டாயமாக அரசாங்கம் தோல்வியே அடையும். தோல்வியினை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற காரணத் தினாலேயே அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடத்துவதில் காலதாமதத்தை ஏற்படுத்தி, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் நேரடியாக 2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்தே தனது நகர்வுகளை நகர்த்தி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)




### நாகபூஷணியே வரமருள்வாய்

ஆர்ப்பரிக்கின்ற சப்ததீவுகளின் நடுவே
நாகமது உனை குடைபிடிக்க
அதில் வீற்றிருந்து
அடியவர்களுக்கு அருள்பாலிக்கும்
நயினை நாகபூஷணியே
நாகதோசத்துடன் உனை நாடி வரும்
அடியவர்களின் தோஷமதை நீக்கிவிடு- தாயே

சின்னமலர்
மடத்தடி, சாவகச்சேரி.

### நயினை தாயின் கொடியேற்றம்

ஆனித்திங்கள் பிறந்ததம்மா- உன்
அருளொளி கண்டு உளம் மகிழ்ந்ததம்மா
தேனிலும் இனிய உன் அருளாட்சி
கண்டோம் பொங்கி மகிழ்ந்ததம்மா

அம்மா உந்தன் கொடியேற்றம்
கண்டே களிக்கும் என் நெஞ்சம்
இம்மா நிலத்தில் உனைபாட
இனிதே ஆடி வாம்மா.

ஜெ.ஜெயவினோதனன்
தரம் 11 F
யா/ பரியோவான் கல்லூரி, மாணவன்

### கொடியேறி அருள்புரிவாய் எங்கள் தாயே

மணிபல் லவத்தில் உறைந்திடும் தாயே
மகிமைக் குரிய புவனேஸ்வரியே
அணியணி யாக பக்தர்கள் சூழ
அருளொளி வீசும் தாயவள் நீயே
மணிமந் திரங்கள் ஒளிகொண் டாட
மண்ணில் எம்மை ஆண்டருள் புரியும்
அணிகொள் புவனேஸ் வரியே நாக
தாயே அருள் கொடி ஏற்றம் கொண்டருள்வாய்

சு. குகதேவன்,
நெல்லிப்பழை.

# வடக்கில் வரட்சியால் மக்களுக்கு அதிக பாதிப்பு

## இடர் முகாமைத்துவ நிலையம் தகவல்

(கொழும்பு)

நாட்டின், வட பகுதியில் நிலவும் வரட்சியுடன் கூடிய வானிலை காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான மக்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் ஒரு சில குடும்பங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில், 15 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 23,000 குடும்பங்கள் கடந்த இரு மாதங்களாக நிலவும் வரட்சியுடன் கூடிய வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2,326 குடும்பங்களைச் சேர்ந்த 6,978 பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் சுமார் 40,000 குடும்பங்கள் வரட்சியால் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடும் மழை, வெள்ளம், மண்சரிவு மற்றும் கடும் காற்று ஆகிய அனர்த்தங்களால் 60,944 குடும்பங்களைச் சேர்ந்த 214,083 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# பூஜித நியூயோர்க் பயணம்

## பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொலிஸ்மா அதிபர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக, இலங்கை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, ஐக்கிய அமெரிக்காவுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பயணமாகியுள்ளார்.

இந்த மாநாடு, எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் நடைபெறும். அவர் நாடு திரும்பும் வரையிலும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்கிரமரத்ன, பதில் பொலிஸ்மா அதிபராக பதவி வகிப்பார். (இ)

# கல்வியுடன் எவரும் விளையாடக்கூடாது பாடங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

பாடங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பாட விதானத்திலிருந்து வரலாறு, மொழி உள்ளிட்ட எந்தவொரு பாடமும் அகற்றப்படாது, என ஊடகங்களுக்கு கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

சில அரசியல்வாதிகள் பாடங்கள் குறைக்கப்படவுள்ளதாக பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் பாடவிதானம் தயாரிக்கும் பணியில் அரசியல்வாதிகள் ஈடுபடுவதில்லை எனவும், கல்வியியலாளர்களே இதனைச் செய்வார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போலிப் பிரசாரங்களைச் செய்து கல்வியுடன் எவரும் விளையாடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



# பாரதம்

## காவிரி ஆணையத்தை செயற்படுத்த வேண்டும்

### மோடியிடம் பழனிச்சாமி கோரிக்கை



(டில்லி)

காவிரி மேலாண்மை ஆணையத்தை உடனடியாக செயற்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என தமிழக முதல்வர் பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார். ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் தலா ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நிதி ஆயோக் அமைப்பின் 4-வது ஆட்சி மன்றக் கூட்டம், டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் முதல்வர் பழனிச்சாமி தெரிவித்ததாவது:

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் கலாசாரம், சமூக ரீதியாக வேறுபட்டுள்ளது. தேவைகளும் மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடுகிறது. இவற்றை கருத்தில் கொண்டு வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். பிரதமர் மோடியின் சிறப்பான தலைமையின் கீழ் இது சாத்தியமாகும் என நம்புகிறேன்.

நிலையான வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை திட்டங்கள் இருந்தால்தான் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்க முடியும். விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, மீன் வளர்ப்பு, தோட்டக்கலை பயிர்கள் வளர்ப்பு ஆகியவற்றையும் ஊக்குவிக்க வேண்டும். தேசிய விவசாய இணையச்சந்தை, மண் வள அட்டை, நகர்ப்புற, கிராமப்புற சந்தைகளை ஒருங்கிணைத்தல், நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதல் போன்ற திட்டங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்த வேண்டும்.

தமிழகம் அண்டை மாநிலங்களில் இருந்து பாயும் நதிகளை குறிப்பாக காவிரியை நம்பியுள்ளது. எனவே, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை செயற்படுத்த காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக செயற்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.

மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வை 14 ஆவது நிதி ஆணையம் 32 இல் இருந்து 42 சதவீதமாக உயர்த்தியுள்ளது. ஆனால், தமிழகத்துக்கு நிதிப் பகிர்வு 4.9 சதவீதத்தில் இருந்து 4.02 சதவீதமாக குறைந்துள்ளது. இதனால் தமிழகத்துக்கு ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டு வருகிறது.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வு செய்யப்படும் என 15ஆவது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இதனால், மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படும். எனவே, ஏற்கனவே உள்ள முறைப்படி 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படியே நிதிப் பகிர்வு செய்ய வேண்டும். மார்ச் 2018 வரை தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய கல்வி உதவித் தொகை ரூ.1,804 கோடி நிலுவையில் உள்ளது. இதை உடனடியாக வழங்க வேண்டும் என முதல்வர் மேலும் தெரிவித்தார். (இ)

## அமைச்சர் கடம்பூர் ராஜு இல்ல திருமண விழாவில் எஸ்.வி.சேகர்

### மீண்டும் சர்ச்சை

(சென்னை)

அவதூறு வழக்கில் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நடிகர் எஸ்.வி.சேகர் அமைச்சர் கடம்பூர் ராஜு இல்ல திருமண விழாவில் பங்கேற்ற சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாரதிய ஜனதா கட்சி பிரமுகரும், காமெடி நடிகருமான எஸ்.வி.சேகர் தனது பேஸ்புக் பக்கத்தில் பெண் பத்திரிகையாளர்கள் பற்றி அவதூறாக கருத்து வெளியிட்டமை கண்டனத்துக்குள்ளானது.



இது தொடர்பாக பத்திரிகையாளர்கள் அளித்த புகாரின் பேரில் எஸ்.வி. சேகர் மீது மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். ஆனால் அவரை கைது செய்யவில்லை.

கடந்த 50 நாட்களுக்கும் மேலாக எஸ்.வி.சேகர் தலைமறைவாகாமல் சென்னையிலேயே சுற்றி வருகிறார். இது தொடர்பாக சென்னை மாநகர பொலிஸ் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதனிடம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். ஆனால் அவர் பதில் அளிக்காமல் சென்று விட்டார்.

அதே நேரத்தில் இந்த சம்பவம் தொடர்பாக அமைச்சர்களிடமும் பல முறை கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

அமைச்சர் கடம்பூர் ராஜு விடமும் எஸ்.வி.சேகர் பற்றி பத்திரிகையாளர் கேள்வி எழுப்பி இருந்தனர். இதற்கு பதில் அளித்த அவர் இந்த விடயத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சென்னையில் நேற்று முன்தினம் இரவு அமைச்சர் கடம்பூர் ராஜுவின் மகன் அருண் குமாரின் திருமண நிச்சயதார்த்த விழா நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சேகரும் பங்கேற்றார். இது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர் கடம்பூர் ராஜுவின் குடும்பத்தினருடன் தான் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை எஸ்.வி.சேகர் தனது முகநூல் பக்கத்திலும் வெளியிட்டுள்ளார்.

அவதூறு வழக்கில் பொலிஸார் தேடி வரும் நிலையில் எஸ்.வி.சேகர் கடந்த சில நாட்களுக்கு முன்னர், மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணனுடன் பொது நிகழ்ச்சியில் பங்கேற்ற புகைப்படங்களும் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் தமிழக அமைச்சரின் இல்ல திருமண நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொண்டிருப்பது கூடுதல் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பொது மக்கள் கடுமையான விமர்சனங்களையும் பதிவிட்டு வருகின்றனர்.

பாஜனதா தலைவர் தமிழிசை சௌந்தரராஜனை இழிவாக பேசிய பெண்ணை உடனடியாக கைது செய்த பொலிஸாரால் எஸ்.வி. சேகரை ஏன் கைது செய்ய முடியாது? என்று கேள்வி எழுப்பியுள்ளனர். (இ)

## வடகொரியாவுடன் பே

## தென்கொரியாவுடன் இரா

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

வடகொரியாவுடனான பேச்சுவார்த்தை முறிந்து போனால் தென் கொரியாவுடன் இராணுவ ஒத்திகைகள் தொடங்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றத்தை உருவாக்கி வந்த வடகொரிய ஜனாதிபதி தனது அணு ஆயுத திட்டங்களை கைவிடுவதாக அறிவித்தது டன், அமெரிக்காவுடன் சமாதான பேச்சுவார்த்தைக்கு முன்வந்தார்.

அதன்படி இம்மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பு நடைபெற்றது. சமரச ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டது.

அப்போது வடகொரியா வில் உள்ள அணுஆயுதங்கள் அனைத்தையும் அழித்து விடுவதாக கிம் ஜாங் உன் ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

வடகொரியா அணு ஆயுதங்களை முழுமையாக அழித்தால் அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறிவருகிறது.

அதேசமயம் பேச்சுவார்த்தையை சுமுகமாக நடத்தும் வகையில் கொரிய

## மகனின் உயிரைப் பறித்த தாயின் சவப்பெட்டி



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் தாயின் இறுதிச்சடங்கின் போது சவப்பெட்டி விழுந்ததில் மகன் உடல் நசுங்கிப் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவில் சுலாவேசி தீவை சேர்ந்தவர் சமேன்கோண்டுரா (வயது 40) இவரது தாயார் மரணமடைந்து விட்டதையடுத்து அவரது இறுதிச்சடங்கு வடக்கு டோராஜா மாவட்டத்தில் பரின் டிங் பள்ளத்தாக்கு பகுதியில் நடந்தது.

அவரது உடலை சவப் பெட்டியில் வைத்து அதை மூங்கில் ஏணியில் தூக்கி சென்றனர். அப்போது அப்பெட்டி தவறி கீழே விழுந்தது.

இதில் சமேன் கோண்டுரா சிக்கினார். அதனால் படுகாயமடைந்த அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்தும் தனது தாயின் இறுதிச்சடங்கு முடியும் முன்பே அவர் பரிதாபமாக உயிரிழந்தார். (இ)

## பத்திரிகையா

## அமைதியை

(டில்லி)

மூத்த பத்திரிகையாளரும் 'ரைசிங் காஷ்மீர்' ஆசிரியருமான ஷுஜாத் புகாரி பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சி தருகிறது. இச்சம்பவத்தில் அவரது பாதுகாவலர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தெளிவான சிந்தனையுடன் செயற்பட்ட புகாரி, 'தி இந்து' ஆங்கில நாளிதழின் நிருபராகவும் காஷ்மீர் நிலவரம் குறித்து மிகச் சிறப்பான செய்திகளை அளித்துவந்தவர். காஷ்மீரிகளின் நல்லெண்ணத்தை மீட்கும் வகையில் போர் நிறுத்த நடவடிக்கையை அறிவித்த மத்திய அரசு, ரமழான் முடிந்த பிறகும் அதை மேலும் தொடரவிடக் கூடாது என்ற நோக்கத்திலேயே, பயங்கரவாதிகள் இந்தப் படுகொலையை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

இச்சம்பவத்துக்கு முதல் நாள் தான், புல்வாமா மாவட்டத்தில், ரமழானைக் கொண்டாடச் சென்ற அவுரங்கஜீப் என்ற இராணுவ வீரர் கடத்திக் கொல்லப்பட்டார். அதற்கும் முன்னதாக அதே மாவட்டத்தில் இரண்டு காவலர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவங்கள் மத்திய - மாநில

## யூலின் நாய்க்கறி திருவிழாவில் 10 ஆயிரம் நாய்களை பலியிடும் சீனர்கள்

### சமூக ஆர்வலர்கள் கண்டனம்

(பீஜிங்)

சீனாவின் யூலின் நகரில் நாளை மறுதினம் 21 ஆம் திகதி தொடங்கும் நாய்க்கறி திருவிழாவில் சுமார் 10,000 க்கும் மேற்பட்ட நாய்களை இறைச்சிக்காக பலியிட்டு கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவின் குவாங்ஸி மாகாணத்தின் யூலின் நகரில் ஆண்டு தோறும் நாய்க்கறி திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவுக்கு உலகம் முழுவதும் உள்ள விலங்குகள் நல ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதற்கு காரணம் இந்த திருவிழாவில் பலியிடப்படும் விலங்குகள் தான்.

இந்த ஆண்டு யூலின் நாய்கறி திருவிழா நாளை மறுதினம் 21 ஆம் திகதி தொடங்குகிறது. சுமார் ஒரு வாரம் இந்த நாய்க்கறி திருவிழா நடைபெறும். இந்த திருவிழாவில் நாய்கள் உயிருடன் விற்பனை செய்யப்படும். விற்பனை செய்யப்படும் நாய்கள் அங்கேயே வெட்டப்பட்டு அல்லது உயிருடன் தீயில் வாட்டப்பட்டு இறைச்சியாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும். கடந்த 10 ஆண்டுகளாகத் தான் இந்த திருவிழா நடைபெற்று வருகிறது. சீனாவில் கோடை காலங்களில் நாய் இறைச்சி உண்பது உடலுக்கு நல்லது என்பது நம்பப்படுகிறது. அதேபோல்

# வெளிநாடு




# பேச்சு முறிந்தால் ...ராணுவ ஒத்திகை

தீபகற்பத்தில் அமெரிக்கா நடத்தி வந்த இராணுவ ஒத்திகைகள் நிறுத்திவைக் கப்பட்டுள்ளன. இதனால் அமெரிக்கா - வட கொரியா இடையே நடக்கும் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை பயனு ள்ளதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட் டுள்ளது.

இதுபற்றி ஜனாதி ட்ரம்ப் டுவிட்டர் தளத்தில் அடுத்தடுத்து பதிவு செய்துள்ள கருத்துக்கள் வருமாறு. பேச்சுவார்த் தையின்போது போர் விளையாட்டு களை இராணுவ ஒத்திகை நிறுத்திவைக் கும்படி நான் கேட்டுக்கொண்டேன். ஏனென்றால் இராணுவ ஒத்திகைக்கு அதிக செலவு ஆவதுடன், உண்மை யான பேச்சுவார் த்தை நடக்கும்போது அதற்கு களங்கத்தை ஏற்படுத்தி விடும். ஆத்திரத்தையும் தூண் டும். பேச்சுவார்த்தை முறிந்து போனால் தென்கொ ரியா வுடனான இராணுவ ஒத்திகையை மீண்டும் தொடங்குவோம். அப்படி நடக்காது என நம்பு கிறேன். சிங்கப்பூரில் வட கொரிய ஜனாதிபதியை சந்தித்தபோது அவருக்கு நான் அதிகளவில் ஆதரவு அளித்த தாக போலியான செய்திகள் பரப்பப்படுகின்றன.

இது வேடிக்கையானது. இந்த் சந்திப்பின் மூலம் உல கில் அமைதி ஏற்பட்டுள் ளது. வடகொரியாவுடனான அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்த த்தை ஆசிய கண்டம் முழு வதிலும் பாராட்டி கொண் டாடு கின்றனர் என ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஜப்பானில் கடும் நிலநடுக்கம் 3 பேர் பலி; 200பேர் காயம்



(டோக்கியோ)

ஜப்பானின் இரண்டா வது மிகப்பெரிய நகரமான ஒசாகாவில் நேற்றுக் காலை 8மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மூன்று பேர் பலியானதோடு, 200 பேர் காயமடைந்துள்ள னர்.

இந்த நிலநடுக்கத்தின் சேத விபரங்கள் முழுமை யாக வெளியாகாத நிலை யில் உயிரிழந்தவர்களில் 9 வயது சிறுமி ஒருத்தியும் உள்ளடங்குவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

5.3 ரிக்டர் அளவில் பூமியதிர்வு பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. எனினும் நிலநடுக்கமானது 5.9 ரிக்டர் அளவில் பதிவான தாகவும், பின்னர் 6.1 ரிக்டர் அளவில் அது அதிகரித்து காணப்பட்டதாகவும், ஜப் பானிய வானிலை அவதா னம் நிலையம் குறிப்பிட்டுள் ளது.

தொழிற்சாலைகள் அதிக மாக அமைந்துள்ள பிரதேசத் தில் நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து, தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள தோடு பணியாளர்கள் அனை வரும் வெளியேற்றப்பட் டுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றுவோம். முதலில் மக்களை பாதுகாக்க வேண் டும் என அந்நாட்டு பிரதமர் சின்ஷோ அபே குறிப்பிட் டுள்ளார்.

இந்த நிலநடுக்கத்தால் யோட்டோ, நாரா, யோகோ, ஷிகா உள்ளிட்ட பல நகரங் களுக்கான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் வீடுகளுக்கான சமையல் எரிவாயு விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஜப்பான் டைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது. (இ)



# ...யாளர் புகாரி கொலை ...யை குலைக்கும் செயல்



அரசுகளுக்கும் பாதுகாப்புப் படையி னருக்கும் விடுக்கப்படும் சவால்களா கும். 'தாக்குதல் நிறுத்தம் வேண்டும், பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்' என்று முத ல்வர் மெஹ்பூபா முஃப்தி கோரிவருகிறார். இந்நிலையில், இது போன்ற படுகொலைகளைப் பயங் கரவாதிகள் அரங்கேற்றிவருகிறார் கள். இதற்கிடையே, ரமழான் தொழுகை காலத்தில், அமைதியைக் கொண்டு வரும் நோக்கில், பயங்கரவாதிகளு க்கு எதிரான நடவடிக்கைகளை நிறு த்திவைத்திருந்த அரசு, அது மீண்டும் தொடரும் என்று அறிவித்திருக்கிறது.

புகாரியின் படுகொலையானது நாட்டில் இப்போது நிருபர்க ளுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக் கும் பல மாநிலங்களிலும் ஏற்பட்டிருக்கும் உயிர் அச்ச த்தை உணர்த்து வதா கவே இருக்கிறது. கடந்த ஆண்டு கர்நாடகத்தில் கௌரி லங்கே ஷும் திரிபுராவில் சாந்தனு பவுமியும் படுகொலை செய் யப்பட்டனர். இதற்கு முன னர் 2006இல் புகாரியைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்ற னர். அவர்கள் கொடுத்த தொல்லைகளையெல்லாம் தீரத்துடன் அவர் எதிர்கொண் டார். அதன் பிறகுதான் ஆயு தம் தாங்கிய இரண்டு மெய்ப் பாதுகாவலர்கள் அவருக்குப் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டார் கள்.

பத்திரிகையாளர்களின் பணி முக்கியத்துவம் வாய் ந்தது, வேறு யாராலும் அவர் களுடைய பணியைச் செய்ய முடியாது. காஷ்மீர் விவகார த்தில் வெவ்வேறு தரப்பினர், வெவ்வேறு நோக்கங்களுட னும் சித்தாந்தங்களுடனும் எதிரெதிராகச் செயற்பட்டு வரு கின்றனர். நேர்மையான, நடு நிலையான பத்திரிகையா ளர்கள் மட்டுமே, அமைதி திரும்ப அரசு எடுக்க வேண் டிய நடவடிக்கைகள் என்ன, அரசின் செயல்கள் குறித்து மக்களுக்குள்ள அதிருப்தி கள் என்ன என்று தெளிவா கத் தெரிவித்து வருகின்ற னர். இந்தப் பின்னூட்டங் கள் இல்லாமல் அரசால் தெளி வான, மக்கள் ஏற்கும்படியான முடிவுகளை எடுக்க முடி யாது. பத்திரிகையாளர்கள் தரும் தகவல்களைப் பிரி வினைவாதிகள் மட்டும ல்ல, தேசியவாதிகளும்கூட பல சந்தர்ப்பங்களில் விரும்பு வதில்லை. இந்நிலையில், அமைதிக்குக் குந்தகம் விளை விக்கும் இதுபோன்ற பயங் கரவாத நடவடிக் கை களை எதிர்கொள்ள அரசு உறுதியு டன் செயலாற்ற வேண்டும்!

த ஹிந்து
ஆசிரியர் தலையங்கம்

தங்களது பாரம்பரிய நம் பிக்கை சார்ந்தும் நாய்களை பலியிடுதலும் அரங்கேறும். ஆனால் இத் திரு விழாவில் விற்பனை செய்வதற்கா கவே நாய்கள் திருடப்படுவதாக விலங்குகள் நல ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ள னர்.

அத்துடன் மிக கொடூரமான முறை யில் கூண்டுகளில் அடைத்து யூலினுக்கு நாய்கள் கொண்டு வரப்படுவதாகவும் கூறப்படுகிறது. இத்திரு விழாவுக்கு தடை விதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விலங்குகள் நல ஆர்வலர்கள் சமூக வலைத்தளங்களில் பிரசாரம் செய்து வருகின்றனர். ஆனால் இதைப் பற்றிய கவலைகள் இன்றி நாய்க்கறி திரு விழாவுக்கு சீனர்கள் தயாராகி வருகின்றனர். (இ)

# வெனிசுவெலாவில் இரவு விடுதியில் கூட்ட நெரிசலில் சிக்கி 17 பேர் பலி!




(கராகஸ்)

வெனிசுவெலா நாட்டில் இரவு விடுதியில் கூட்ட நெரி சலில் சிக்கி காயம் அடைந் தும், மூச்சு திணறியும் 17 பேர் உயிரிழந்தனர்.

வெனிசுவெலா நாட்டின் தலை நகர் கராகஸ். அங்கு லாஸ் காட்ட்ராஸ் என்ற இரவு விடுதி உள்ளது.


அங்கு பாடசாலையொ ன்றின் ஆண்டுநிறைவுவிழா வையொட்டி நேற்று முன்தி னம் விருந்து நிகழ்ச்சி நட ந்து கொண்டிருந்தது. இதில் 500 இற்கும் மேற்பட்டவர் கள் உற்சாகமாக கலந்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு இரு தரப்பினரிடையே மோதல் வெடித்துள்ளது: அதைத் கட்டுப்படுத்தும் முயற்சியாக அங்கு கண்ணீர்ப்புகை குண்டு வெடிக்கப்பட்டது. இதைக் கண்டு பதறிப்போன மக்கள் அங்கிருந்து ஒரே நேரத்தில் வெளியேற முயற் சித்தனர். அப்போது தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதில் பலர் கீழே விழுந்தனர். அவ ர்கள் மீது ஏறிச்சென்று பலர் தப்பினர்.

இந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி காயம் அடைந்தும், மூச்சுத் திணறியும் 17 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் 16-20 வயதுக்கு உட்பட்டவர்கள் எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன. மேலும் 5 பேர் படு காயங்களுடன் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவ தாக வும் இந்தச் சம்பவம் தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வும் பொலிஸார் தெரிவித்த னர். (இ)

# பெண்ணை உயிருடன் விழுங்கிய மலைப்பாம்பு

## இந்தோனேசியாவில் பரபரப்பு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் 23 அடி நீள இராட்சத மலைப் பாம்பொன்று கடந்த சனிக் கிழமை பெண்ணொருவரை உயிருடன் விழுங்கியுள்ள சம்பவம் தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியாவின் முன்னா எனும்தீவில் உள்ள லாவெலா கிராமத்தில் வசி க்கும் 51 வயதுடைய திபா என்ற பெண்ணையே இந்த மலைப்பாம்பு விழுங்கியுள் ளது.

தமது தோட்டத்தில் காய் கறிகள் பறிப்பதற்காகச் சென்ற அவர் இரவு முழுவதும் வீட் டுக்கு வராதமையால் அவ ரது உறவினர்கள் தொடர்ச் சியாக தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.

இறுதியாக தோட்டத்துக் குச் சென்று பார்வையிட்ட போது அங்கு ஒரு இராட்சத மலைப்பாம்பொன்று ஏதோ இரையை விழுங்கிவிட்டு நகர முடியாமல்படுத்திருப் பதை அவதானித்துள்ளனர்.

மேலும்சந்தேகம்கொண்ட கிராமத்தினர் அந்த இராட் சத மலைப்பாம்பைக்கொன்று அதன் வயிற்றுப்பகுதியைக் கத்தியால் கிழித்துப்பார்த்த போது திபாவின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிராமத்தி னர் தெரிவிக்கையில், இதற்கு முன்னர் சிறிய அளவிலான மலைப்பாம்புகள் தான் இங்கு சுற்றித்திரியும். இவ்வாறான இராட்சத மலைப்பாம்பை கண்டதில்லை. தோட்டங்க ளில் பாறைகளும் குழி களும் அதிகமாகக் காணப் படுகின்றமையால் இங்கு அதிகமாக மலைப்பாம்புகள் வசித்து வருகின்றன என அவர்கள் கூறியுள்ளனர்.

வழக்கமாக ஆடுகள், கோழிகள், சிறு உயிரினங் களைத்தான் மலைப்பாம்பு கள் அடித்துக் கொல்லும். எனினும் மனிதர்களை உயி ருடன் விழுங்கும்காட்சிக ளை திரைப்படங்களி லும் மட்டுமே நாம் பார்த்தி ருக்கிறோம்.

ஆனால் இந்தச் சம்பவத் தின் ஊடாக தற்போது உண் மையாகவே மலைப்பாம்பு கள் மனிதர்களையும் வேட் டையாடும் என்பதை நாம் உணர்ந்து விட்டோம் என அப் பகுதி மக்கள் தெரிவித் தனர். (இ-7)

# மாகாண சபைத் தேர்தல் விருப்பு வாக்கு முறையில்

## அரசு கூடிய கவனம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள மாகாணசபைத் தேர்தலை, விருப்புவாக்கு முறையில் நடத்துவது தொடர்பில், அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில், இவ்வாரம் முக்கிய கலந்துரையாடலொன்று நடத்தப்படுமென்றும் தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக, கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இந்த விவகாரம் தொடர்பில் ஆராயப்படும்.

தொகுதி மற்றும் விகிதாசாரம் ஆகிய இரண்டு முறைமைகளையும் கலந்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் போது பாரிய குறைபாடுகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்தே, விருப்பு வாக்கு முறைமையில் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சிறுபான்மைக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்டவையே மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இதேவேளை, சப்ரகமுவ, வடமத்தி மற்றும் கிழக்கு ஆகிய மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்து சில மாதங்கள் கடந்துவிட்டன. இன்னும் சில மாதங்களில் வடக்கு, மத்திய மற்றும் வடமத்திய ஆகிய மாகாண சபைகளின் பதவிக்காலங்களும் நிறைவடையவுள்ளன.

தொகுதி மற்றும் விகிதாசாரம் ஆகிய இரண்டு முறைமைகளையும் கலந்தே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், விருப்பு வாக்கு முறைமையின் பிரகாரமான பழைய முறைப்படி தேர்தலை நடத்த வேண்டுமாயின் மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் தெரிய வருகிறது.


இதேவேளை, மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தாமல், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றியமையானது, அரசமைப்புக்கு முரணானதாகும் என்று குறிப்பிட்டு, அந்தச் சட்டமூலத்தை இரத்துச் செய்யுமாறு முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தாக்கல் செய்திருந்த மனு உயர் நீதிமன்றத்தினால் கடந்த வியாழக்கிழமை தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சிறையில் புத்தகம் எழுதுகிறார் ஞானசாரர்

(கொழும்பு)

சிறையில் தண்டனை அனுபவித்து வரும் பொதுபல அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் புத்தகம் ஒன்றை எழுதத் தொடங்கியுள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஞானசார தேரர் தற்பொழுது தண்டனை அனுபவித்து வருகின்றார்.



“சிங்கள பௌத்த நாட்டில் பௌத்த பிக்குகளுக்கும் பௌத்தர்களுக்கும் நேர்ந்துள்ள கதி மற்றும் ரோமடச்சு சட்டங்கள் எமது நாட்டுக்கு பொருந்துமா'' என்ற தொனிப்பொருளில் இந்த நூலை ஞானசார தேரர் எழுதி வருகின்றார் என சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், ஞானசார தேரர் தம்மை பார்வையிட வரும் எவரையும் சந்திக்க விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கையில் இந்தாண்டில் செயற்கை மழை; தாய்லாந்து விரைகிறது நிபுணர்கள் குழு

(கொழும்பு)

செயற்கையாக மழையை உருவாக்கும் திட்டத்தை இந்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

செயற்கையாக மழையை உருவாக்கும் திட்டத்தின் தொழில்நுட்பம் தொடர்பில் அறிந்துகொள்வதற்காக அத்துறைச் சார்ந்த நிபுணர்கள் குழு ஒன்று இந்த மாதத்தின் இறுதியில் தாய்லாந்து செல்லவுள்ளதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி இராஜாங்க அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

வானிலை அவதான நிலையம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, விமானப் படை மற்றும் இலங்கை மின்சார சபை உள்ளிட்டவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிபுணர்களே தாய்லாந்து செல்லும் குழுவில் இடம் பிடித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு 4 மணி நேரத்திற்கு முன் வாருங்கள்



## பயணிகளுக்கு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க அனைத்துலக விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் அனைவரையும், நான்கு மணிநேரம் முன்னதாகவே விமான நிலையத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க அனைத்துலக விமான நிலையத்தில் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனால், திட்டமிட்ட பயண நேரத்துக்கு நான்கு மணிநேரம் முன்னதாகவே விமான நிலையத்துக்கு வருமாறு பயணிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை நேற்று தொடக்கம் மறு அறிவிப்பு வெளியாகும் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்தில் உள்ள குடியகல்வுச் சோதனைப் பகுதி உள்ளிட்ட பல பகுதிகளில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விகாராதிபதி மீது துப்பாக்கிச் சூடு சந்தேக நபர் விளக்கமறியலில்

(கொழும்பு)

கிரிவெஹர ரஜமகா விகாரையின் விகாராதிபதி மீது துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் தொடரபில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரான அசோல சம்பத் மற்றும் ஏனைய இரண்டு சந்தேக நபர்களையும் விளக்க மறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களை நாளை 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை திஸ்ஸமகாராம நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்திய போதே அவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏனைய சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## இன்று ஒரு தகவல்

# கவலைப்படக் கற்றுத் தருகிறவர்கள்

“தமிழில் 26 மார்க் வாங்கிட்டு வந்திருக்கான். கொஞ்சமாவது கவலைப்படறானா பாருங்க” இது அம்மா.

“ என்னடா இது! வேலையைவிட்டு அனுப்பிட்டாங்கன்னு கொஞ்சங்கூடக் கவலையேபடாம கூலா சொல்றே?” இது அப்பா.

“பேர்ஸைத் தொலைச்சிட்டேன்னு சிரிச்சுக்கிட்டே சொல்றியே. உனக்கு வெக்கமா இல்லை?” இது பொது.

ஓர் இழப்பு சிறிதாகவோ பெரிதாகவோ ஏற்பட்டால் அதற்காகக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டோ முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டோ இருக்க வேண்டும் என்றுதான் பலரும் நமக்குப் “பாலபாடம்” நடத்துகிறார்கள். நம் பெற்றோர் உட்பட. இது என்ன பழக்கமோ தெரியவில்லை!

ஒரு கவலைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது என்றால் அதற்காகக் கவலைப்படாதவன் பொறுப்பற்றவனாகத்தான் இருக்க வேண்டும் என்று எவ்விதக் கட்டாயமும் இல்லை. அவன் இதற்காகவெல்லாம் அசராமல் சூழ்நிலைகளை வெல்வதில் வல்லவனாகவும் இருக்கலாமல்லவா!

கவலைப்படாதவர்கள் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். அவர்களுக்குக் கவலைப்படக் கற்றுத் தரவும் வேண்டாம்.

ஒரு பிளாஸ்ரிக் உடைந்துவிட்டதே என்பதற்காக மனம் உடைந்துவிட வேண்டாம். ஒரு பேர்ஸ் தொலைந்துவிட்டதே என்பதற்காக இதயத்தைத் தொலைத்துவிட வேண்டாம்.

ஒரு தொழில் தோல்வியுற்றதற்காக உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை.

ஒரு பிளாஸ்ரிக்கைவிட, ஒரு பேர்ஸைவிட, ஒரு பொருளாதார நட்டத்தைவிட நம் மன மகிழ்ச்சியும், அதன் மனநிலையும் மிக முக்கியமானவை.

தொழிலையும் இழந்து, காதலையும் இழந்து, மனத்தையும் இழந்துவிட்டால் அந்தச் சோகம் மிகக் கொடியதுதான். அதற்காக இவற்றிலிருந்து மீளவே முடியாது என்றும் புது வாழ்க்கை அமையாது என்றும் எண்ணுவது குழந்தைத் தனம்.

கவலைகளை வெல்லச் சிறந்த வழி மனத்தை எளிதில் பாதிப்பு அடையாமல் வைத்துக் கொள்வதுதான். இந்த ஒரு பயிற்சியில் நாம் வல்லவராகிவிட்டால் எத்தனை கவலைகள் வந்தாலும் அனைத்தையும் எதிர்கொண்டு சமாளிக்கலாம்.

கவலைகளின் மூட்டையாக நாம் வாழ்வது கடினம். அவற்றை அவ்வப்போது விரட்டிக் கொண்டே இருக்க வேண்டும். காரணம், இந்த உலகம் என்பதே தொல்லைகளின் சுவாரம்தான், இதோ! நம்மை நோக்கி அடுத்த கவலை வரத் தொடங்கிவிட்டது!

ஆக, பழைய கவலையை விரட்டுங்கள்! அன்பான வேண்டுகோள், யாரும் எவருக்கும்கவலைப்படக்கற்றுத்தராதீர்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# இன்புளுவன்ஸா வைரஸால் மற்றுமொரு குழந்தை பலி!

(கொழும்பு)


இன்புளுவன்ஸா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மற்றுமொரு குழந்தை உயிரிழந்துள்ளதென.காலி- கராப்பிட்டிய வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் ஜயம்பதி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.ஒரு வயதும் 2 மாதங்களும் பூர்த்தியடைந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.இந்தக்குழந்தை கொனபினுவல பகுதியைச் சேர்ந்ததென, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதயத்தில் ஏற்பட்ட நோயினால் கராப்பிட்டிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.

கடந்த மே மாதம் தொடக்கம் ஜூன் மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், வைரஸ் காய்ச்சல் தொற்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தோரில், 20 குழந்தைகள் உயிரிழந்திருப்பதாக, வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.நோய் எதிர்ப்புச் சக்தி மிகக் குறைவாக காணப்பட்ட குழந்தைகளே, இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் வைரஸ் காய்ச்சலை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள பணிப்பாளர் வைத்தியர் ஜயம்பதி சேனாநாயக்க, வைரஸ் தொற்றுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது வெகுவாக குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியசாலையின் சிறுவர்களுக்கான சிகிச்சைப் பிரிவில், காய்ச்சல் காரணமாக 12 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, இவர்களில் இன்புளுவன்சா A தொற்றுக்கு இலக்கான 2 சிறுவர்கள் மாத்திரமே, சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (இ)



(கேலிச்சித்திரம்)

## 'தண்டனை வழங்குவது இலகுவான விடயமல்ல'

# ஜனாதிபதியின் கருத்து நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை அவமதிப்பதாகவுள்ளது

## கெஹலிய எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்குவது இலகுவான விடயமல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை அவமதிப்பதாகவே அமைகிறது என மகிந்த அணியின் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகார மோசடியில் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் மற்றும் உயர் மட்ட அதிகாரிகளுக்கு தண்டனை வழங்குவது இலகுவான விடயமல்ல என்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி குறிப்பிடுவது அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தினை அவமதிப்பதாகவே அமைகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டதன் பின்னர் அரசியல் தலைவர்கள். இந்த விசேட அதிகாரத்தினை ஒரு கேடயமாகவே பயன்படுத்தினார்கள். ஆனால் தேசிய அரசாங்கத்தில் இப்பதவி 1972 ஆம் ஆண்டு காலகட்டத்தில் காணப்பட்ட ஜனாதிபதியின் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்து செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டாலும். அந்த அதிகாரம் நடைமுறையில் இருக்கும் வரை அதனை மதித்து செயற்படுத்த வேண்டும்.

பிணைமுறி விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வழங்கிய அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு முழுமையாக சமர்ப்பிப்பதில் அரசாங்கம் தொடர்ந்து காலதாமதத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

பிணைமுறி விவகாரத்தில் தனது பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றி விட்டேன் என ஜனாதிபதி ஒரு போதும் குறிப்பிட முடியாது. ஏனெனில் நாட்டுத் தலைவர் என்ற ரீதியில் பிணைமுறி விவகாரத்திற்கு அவரே முழுமையான பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும் என கெஹலிய மேலும் தெரிவித்தார். (இ)

# கச்சாய் எண்ணெய் கடலில் கலந்ததால் 5 கோடி ரூபாவுக்கு மேல் அரசிற்கு நட்டம்





(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் பெருந்தொகை கச்சாய் எண்ணெய் கலந்துள்ளமையினால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கோடிக்கணக்கில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

வத்தளை, எலகந்த, உஸ்வெட்டகெய்யாவ கடற்கரையில் இருந்து முத்துராஜவெல பகுதியில் எண்ணெய்க் குழாய் ஒன்று உடைத்தமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 5 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கச்சாய் எண்ணெய் 50 தொன் கடலுக்கு சென்றிருக்கலாம் என கருதப்படுகின்றது.

எண்ணெய்க் குழாய் உடைந்து கடலில் கலந்து கொண்டிருப்பதாக ஊடகங்களில் தகவல் வெளியாகும்வரை அது தொடர்பில் கூட்டுத்தாபன அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை.

சுமார் நான்கு மணித்தியாலங்களாக எண்ணெய் கடலில் கலந்துள்ளது. எண்ணெய்க்குழாயில் 200 அடிப் பகுதி கடல் நீரில் கரைந்து சென்றுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பெற்றோலிய கூட்டுத்தாபனம் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இந்த அனர்த்தம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# இலத்திரனியல், மின் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை, பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் இலத்திரனியல் மின் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் இம்மாதம் நடத்தப்படவுள்ளன. நாளை மறுதினம் 21.06.2018 வியாழக்கிழமை மற்றும் 22.06.2018 வெள்ளிக்கிழமை தானியங்கி பாதுகாப்பு தொகுதி பொருத்துகை தொழில்நுட்ப பயிற்சி நெறி (Installation of sensor security system) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அதேபோல் எதிர்வரும் 26.06.2018 செவ்வாய்க்கிழமை, 28.06.2018 வியாழக்கிழமை மற்றும் 29.06.2018 வெள்ளிக்கிழமை சீ.சீ.ரிவி கமரா பொருத்துகை தொழில்நுட்ப பயிற்சி நெறி (Installation of cctv camera) காலை 9 மணிக்கு ஆரம்பமாகி எமது பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இப் பயிற்சி நெறிகளை பின்பற்றுவதற்கு விருப்பமுள்ளவர்கள் அத்தினங்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# விபத்தில் இரு இளைஞர்கள் பலி!

(கொழும்பு)

கந்தானை - பேரலந்தை பகுதியில் புகையிரதத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

ரயில் பாதுகாப்புக் கடவை மூடியிருந்த நிலையில், அதனூடாக மோட்டார் சைக்கிளை செலுத்தியதனாலேயே, இந்த இருவரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கல்பொரளை, களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த சேனக விக்கிரமசிங்க (வயது-41) மற்றும் பட்டிவெல, கோனவெல பிரதேசத்தைச் சேர்ந்த ரஞ்சித் குமாரசிறி (வயது-42) ஆகியோரே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

சம்பவத்தையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் விபத்தில் சிக்கிய இருவரையும் ராகம வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

மேலும் குறித்த விபத்தானது அருகிலிருந்த சி.சி.ரி.வி. கமரா ஒன்றில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நீர்க்கசிவால் உமாஓயாவுக்கு இன்னுமொரு வருடகாலம் தேவை




(கொழும்பு)

கரந்தகொல்ல சுரங்கப் பாதையில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவு காரணமாக உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைய இன்னும் ஒரு வருடம் தேவைப்படுவதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின்கீழ் 2008 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின.

இதேவேளை, இத்திட்டத்தினால் மலையக நீரேந்துப் பகுதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை தடுக்க செயற்றிட்டப் பொறியியலாளர்கள் தவறியுள்ளதாக சூழலியலாளர்கள் குரல் எழுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஸ்கொட்லாந்து யுவதிகளிடம் கொள்ளையடித்தவர்கள் கைது

(கொழும்பு)

எல்ல பகுதியில் அமைந்துள்ள 9 வளைவுகள் பாலத்தை பார்வையிட வந்த ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த இரண்டு யுவதிகளிடமிருந்து கைப்பையை கொள்ளையடித்துச் சென்ற இளைஞர்களை தமது தொலைபேசி மூலம் படம் எடுத்து அதனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த யுவதிகள் இருவரும் பாலத்தை பார்வையிட்டுக்கொண்டிருந்த போது, ஐவர் அடங்கிய இளைஞர் குழு யுவதிகளின் பையை பறித்துச் சென்றுள்ளது. இதன்போது குறித்த யுவதிகளுள் ஒருவர் தனது தொலைபேசி மூலம் கொள்ளையர்களைப் படம் எடுத்து பொலிஸாரிடம் காண்பித்ததையடுத்து 4 சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதனையடுத்து யுவதிகளின் கைப்பை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்த 82,000 ரூபாய் பெறுமதியான கமரா மற்றும் 10,000 ரூபாய் பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலும் ஒரு சந்தேகநபர் 46,000 ரூபாய் பணத்துடன் தப்பிச் சென்றுள்ளாரனெ தெரிவித்த பொலிஸார் அவரைத் தேடும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரும் 20 மற்றும் 21 வயதானவர்களெனவும் இவர்கள் களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்களெனவும்பண்டாரவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மருதானையில் வாகன நெரிசல் லோட்டஸ் வீதிக்குப் பூட்டு

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் நேற்று நண்பகல் மருதானை, டீ.ஆர்.விஜேயவர்தன மாவத்தையில் ஒரு பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

மேலும் லோட்டஸ் வீதியும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள், நேற்று முற்பகல் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாகச் சென்ற நிலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 8 ஆவது நாளாகவும் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தனியார் பேருந்துகள் பணிப்பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

பாணந்துறை - கொழும்பு மற்றும் நீர்கொழும்பு - கொழும்பு ஆகிய நகரங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் நேற்றுக் காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன. (இ)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

*பிறப்பு எண் 1*
*விதி எண் 6*

இவர்கள் சில நேரங்களில் மிடுக்கான குரலில் பேசி கடுமையாக நடந்து கொள்வார்கள். ஏன் நடந்தது? என்று தனிமையில் வருந்துவார்கள். சொல் பலம் மிக்கவர்கள். வெகு ஜன வசியமுள்ளவர்கள். எல்லாக் கலைகளைப் பற்றியும் அறிந்து வைத்திருக்கும் பண்புள்ளம் கொண்டவர்கள். வீண் பேச்சை விரும்பமாட்டார்கள். பொதுவாழ்வில் நாட்டமுடையவர்கள். எதையும் வருமுன் யூகித்தறியும் ஞானசக்தி உடையவர்கள்.

தான தர்மங்கள் நிறையச் செய்வார்கள். வீணான ஆடம்பரச் செலவும் செய்வார்கள். ஆண், பெண் நட்புகள் இருக்கும். அழகான புருவம், வசீகரமான கண்கள் இருக்கும். பெரிய துன்பம் வந்தாலும் காட்டிக் கொள்ளாமல் பிறரிடம் மறைத்து விடுவார்கள். இவர்கள் வயது கூடினாலும், கவர்ச்சி குறையாத தோற்றத்துடன் காட்சியளிப்பார்கள். சந்தோசமாகவும், உல்லாசமாகவும் வாழவே ஆசைப்படுவார்கள். உயர்ந்த நிலையில் இருப்பார்கள். தகுதி குறைந்த பெண்களுடன் பழக்கப்பட்டு, பின்னர் வேதனை அடைவர். பெண்களுடன் கவனமாக இருக்க வேண்டும்.

அலங்காரப் பொருட்கள் அதிகம் வாங்கிச் சேர்ப்பார்கள். நேர்மையும் வாதத் திறமையும் இருக்கும். உயர்ந்த சிந்தனை, இலட்சியங்களை நிறைவேற்றியே தீருவார்கள். ஆன்மீகத்தில் அதிகமான நம்பிக்கையுடன் தனிப்பட்ட முறையில் வழிபாடுகளை மேற்கொள்வார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.


அதிர்ஷ்ட திகதிகள்-1, 10,19,28,6,15,24.....

துரதிர்ஷ்ட திகதிகள்- 8, 17, 26, 3, 12, 21, 30.

அதிர்ஷ்ட நிறங்கள் மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பச்சை, வெளிர் பச்சை.

துரதிர்ஷ்ட நிறங்கள் கறுப்பு, கோப்பிகலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள், ஒரேஞ், ரோஸ், கத்தரிப்பூ நிறம்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்




21

மாணிக்கம், கனக புஷ்பராகம், தங்க புஷ்பராகம், அக்கோமரின், மரகதம், பெரில், சூரியகாந்தக் கல்.

*பிறப்பு எண் 1*
*விதி எண் 7*

நல்ல ஞானமும், சிந்தனை செய்யும் சக்தியும் மிக்கவர்கள். கலைகளை மிகச் சிறப்பான முறையில் கற்றுத் தேர்ச்சியடைவார்கள். ஆன்மீகத்திலும், அரசியலிலும் புரட்சிகள் செய்வார்கள். கனவில் உளறும் சுபாவம் உண்டு. கொள்கைப் பிடிவாதமிருக்கும். தெய்வீச நம்பிக்கை அளவு கடந்து இருக்கும். ஆடம்பரத்தை விரும்பாதவர்கள். பார்க்க முரடர்களாகத் தெரிந்தாலும் இரக்க குணம் மிக்கவர்கள். கருணை மிகுந்தவர்கள். மத ஈடுபாட்டை வளர்த்துக் கொள்வார்கள். எதையும் பல்வேறு கோணத்தில் ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பார்கள். மிகவும் சாமர்த்தியசாலிகள்.

கதை, கட்டுரை, காவியம் சொல்வதிலும் எழுதுவதிலும் வல்லவர்கள். எப்போதும் தூய்மையான ஆடைகளையே அணிவார்கள். பார்த்த உடன் நல்லவர்கள் என்றும், முன் கோபக்காரர்கள் என்றும் கூறிவிடலாம். மற்றவர்களும் தன்னைப் போல் இருக்க வேண்டுமென்று எண்ணுவார்கள். நண்பர்களிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும்.

முரட்டுக் குணம் வெளிப்படும். ஆனால் நல்லவர்கள். இவர்களுக்கு நெருங்கிய நண்பர்கள் அமைவது கடினம். நண்பர்கள் என்று இருப்பவர்கள் கூட சுயநலத்திற்காகவே இருப்பார்கள். யாரையும் எளிதில் நம்ப மாட்டார்கள். இளகிய மனமுடையவர்கள்.

கலகலப்பாக பேசும் இவர்கள் துன்பம் வந்தால் அளவுக்கு மீறி அழுதுவிடுவார்கள். எளிமையாக ஆடையணிந்து தூய்மையாகக் காட்சியளிப்பார்கள். கண்ணுக்குப் புலப்படாத சக்திகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்வார்கள். கடுமையான உழைப்பாளிகள். பேசியே காரியம் சாதிப்பதில் இவர்களுக்கு இணை யாருமில்லை. உறுதியான கருத்து உடையவர். சொல்லைச் செயலாக்க துடிப்பவர்கள். வெற்றி பெறுவதையே கருத்தாகக் கொண்டவர்கள். அழுத்தமாகப் பேசக்கூடிய பேச்சுத்திறன் உடையவர்கள். பின்வரும் சம்பவங்களை முன் கூட்டியே அறியும் வல்லமை மிக்கவர்கள். நல்ல நண்பர்கள் பலர் பல உதவிகளைச் செய்ய முன்வருவார்கள். புகழ்ச்சிக்கு மயங்க மாட்டார்கள்.

பிறரின் புகழ்ச்சியைக் கண்டு எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்கள்.

(தொடரும்....)

# 45 ஆயிரம் தடவைகள் பணப்பரிமாற்றம் செய்துள்ள அர்ஜூன் அலோசியஸின் பேர்பெச்சுவல் நிறுவனம்

(கொழும்பு)

அர்ஜூன் அலோசியஸின் பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்திடமிருந்து பல்வேறு தரப்பினருக்கு 45 ஆயிரம் தடவைகளில் கோடிக்கணக்கான பணம் பரிமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் இரகசிய பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் இணை நிறுவனங்களான டபிள்யூ.எம். மெண்டிஸ், வோல்ட் அன்ட் ரோ ஆகிய நிறுனங்களின் ஊடாகவே இவ்வாறு பணப்பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகள், வேறு நபர்களது பெயர்களால் மாற்றப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பணம் பெற்றுக்கொடுக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தகவல்கள், பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனப் பதிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் பலரது பெயர்கள் முதலெழுத்துகளாக மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளதால் உரிய நபர்கள் யாரென்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதுள்ளதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும் எனினும் குறித்த முதலெழுத்துகளுக்குரிய நபர்கள் யாரென்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியால் கடந்த 2016 ஆம் ஆண்டு பொலிஸ்மா அதிபரிடத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, இரகசிய பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளின் மூலம் குறித்த தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள அவசர விபத்துச் சேவைப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இரத்த வங்கி கட்டடத்திறப்பு விழாவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏ.எல்.எப்.ரகுமான் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பிரதி அமைச்சர் ஹரிஸின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த கட்டடம் அமைக்கப்படவுள்ளது. குறித்த நிகழ்வில், பிரதியமைச்சர் ஹரிஸின் அழைப்பின் பேரில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# 8 வருடங்களின் பின் 26 இலட்சம் சவுதி பணிப்பெண்ணுக்கு வழங்கல்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் 8 வருடங்கள் பணி செய்த இலங்கைப்பெண்ணுக்கு 26 இலட்சம் ரூபாய் சம்பளம் கிடைத்துள்ளது.

குறித்த பெண் கடந்த 2009 ஆம் ஆண்டு பணிப்பெண்ணாக சவுதி சென்றுள்ள நிலையில் அவர் பணி செய்த வீட்டின் உரிமையாளர் சம்பளம் வழங்கவில்லை.

இது தொடர்பில் குறித்த பெண்ணின் உறவினர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் முறைப்பாடு செய்தனர். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சவுதி தூதரகம் ஊடாக



ஆராய்ந்த போது இந்த முறைப்பாடு உறுதியாகியுள்ளது.

அதற்கமைய அந்த பெண்ணுக்கு கிடைக்க வேண்டிய சம்பளத்திற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனடிப்படையில் 64,000 சவுதி ரியால் சம்பளப்பணமாக அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் மனுஷ நாணாயக்காரவினால் இரத்தினபுரி பிரதேசத்தை சேர்ந்த அந்த பெண்ணுக்கு 8 வருடங்களுக்குப் பின்னர் 26 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1444

Search for people, places and things | Nagendram Home

### சுவஸ்திகா

தாயின் பார்வையில் வறுமையைப் புரிந்து நடந்து கொள்ளும் பிள்ளை



வறுமையிலும் தாய்க்கு கிடைத்த வரம்...!

### சுராஜ்


அரசாங்க பள்ளியில் படிக்கும் பிள்ளைகளை ஏழைப் பிள்ளைகளாகவும்...



தனியார் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளைப் பணக்கார பிள்ளைகளாகவும் பார்க்கிறது சமூகம்

### சுஜன்

இரக்கமும் உறக்கமும் அளவோடுதான் இருக்க வேண்டும்...



உறக்கம் அதிகமானால் சோம்பேறி என்பர் இரக்கம் அதிகமானால் ஏமாளி என்பர்...!

### சுமிதா

வேலை செய்யும் இடத்தில் தன்மானத்தை இழந்து அவமானப்படும் அனைவரும்...



தன் எதிர்காலத்தின் மீதும் தன் குடும்பத்தின் மீதும் அதிக அக்கறை உள்ளவர்களே...!

### சுமித்ரா

கிராமத்து சமையலின் சுவை கொஞ்சம் குறைவாக இருக்கலாம்...



ஆனால் அன்பும் உபசரிப்பும் அதிகமாகவே இருக்கும்...!

### சுஜா

ஒருவருக்கு உதவுவதன் மூலம் இவ்வுலகை உன்னால் மாற்ற முடியாது



ஆனால் அந்த ஒருவருடைய உலகை உன்னால் மாற்ற முடியும்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2018-14.07.2018



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் ராகுவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அதுமட்டுமல்லாமல் உங்கள் இராசியிலேயே குரு பகவான் வக்கிரம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். 'கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப அற்புதமான பலன்கள் இப்பொழுது நடைபெறப் போகின்றன. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகைவரவு திருப்தி தரும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெற்று, சுகஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நேசிக்கும் நண்பர்களின் எண்ணிக்கை உயரும். சொத்துகள் வாங்க, விற்க எடுத்த முயற்சியில் இருந்த தடைகள் அகலும். அது மட்டுமல்லாமல், வாங்கிய சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் தீர நண்பர்கள் வழிவகை செய்து கொடுப்பார்கள்.

தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். புதிய வாகனங்களை வாங்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும் நேரம் இது. புத - ஆதித்ய யோகம் இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். மேற்படிப்பைத் தொடர முடியாமல் தவித்தவர்களுக்கு மீண்டும் படிக்கும் யோகம் உண்டாகும்.

இம்மாதம் உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான் வக்கிரம் பெற்றிருக்கிறார். மேலும் தன சப்தமாதிபதியான செவ்வாய் வக்கிரம் பெறப் போகிறார். எனவே, அந்தக் கிரகங்களின் சுழற்சியால் உங்களுக்கு வளர்ச்சி ஏற்பட, குறிப்பிட்ட வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். குலதெய்வ வழிபாடுகளும் உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபட்டு வருவதோடு சனிக்கிழமைதோறும் அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது. தெய்வ நம்பிக்கை திருப்தியான வாழ்க்கையை அமைத்துத் தரும்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழில் செய்வதற்கு பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் தேடி வரலாம். படித்து முடித்து படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கும். உறவினர்கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உயரதிகாரிகளின் அன்புக்கு பாத்திரமாவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். குரு வக்கிர நிவர்த்தி ஜூலை 4 ஆம் திகதி துலாம் இராசியில் குரு வக்கிர நிவர்த்தியாகிறார். 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகும் பொழுது, உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் வந்து சேரும். வெளிநாடு செல்ல நினைத்தவர்களுக்கு அந்தக் கனவு நிறைவேறும் வாய்ப்பு உருவாகும். ஒரு சிலருக்கு தொழிலில் கௌரவப் பதவிகள் வந்து சேரும்.




சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இலாபாதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகள் வாங்குவ தில் ஆர்வம் காட்டுவீர் கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். இடமாற்றங்கள் இனிய மாற்றங்களாக வந்துசேரலாம். தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள்.

மகர செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிரம் பெறுகிறார். தனாதிபதி வக்கிரம் பெறுவதால் தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேஇருக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வரன்கள் வாசல் தேடி வந்துசேரும்.

இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப் பெருமானை வழிபாடு செய்வதோடு சஷ்டி விரதமிருப்பது நன்மை தரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். இடம், பூமி வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பும், தாய்வழி ஆதரவும் திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தொழில் வளர்ச்சியில் உங்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். கடந்த காலத்தில் நடைபெறாத சில காரியங்கள் இம் மாதம் நடைபெறும். ஆரோக்கியத் தொல்லை அகலும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கடமையை சரிவரச் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். தென்முகக் கடவுள் வழிபாடு நன்மையை வழங்கும்.

## சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும்!

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்று வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்கும் மாதமாக இம்மாதம் உங்களுக்கு அமையப் போகிறது. கற்றவர்களின் பாராட்டும் மற்றவர்களின் ஒத்துழைப்பும் உற்றார், உறவினர்களின் உதவிகளும் உடனுக்குடன் கிடைக்கும் மாதம் இதுவாகும்.

இராசிநாதன் உச்சம் பெறுவது யோகம் தான். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். செய்யும் பணிகள் சிறப்பாக இருக்கும். நேசக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கையும், பாசமழை பொழிபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். வி.ஐ.பி.க்களின் அறிமுகத்தாலும் ஒத்துழைப்பாலும் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

அஷ்டமத்தில் புதன், சூரியன் இணைந்து புத- ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள். சகாய ஸ்தானம் மற்றும் சுகஸ்தானத்திற்கு அதிபதியான சனிபகவான் வக்கிரம் பெற்று அஷ்டம ஸ்தானத்தைப் பார்க்கிறார். எனவே சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். வியாபாரப் போட்டிகள் அகலும். தொழிலில் கூட்டாளிகளில் ஒரு சிலரை விலக்கி விட்டுப் புதியவர்களைச் சேர்த்துக் கொள்ளும் எண்ணம் மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே பதவி உயர்வு, சம்பள உயர்வு, எதிர்பார்த்த சலுகைகள் அனைத்தும் கிடைக்கும்.

9 இல் சஞ்சரிக்கும் இராகு பகவான், பொன், பொருட்களை குவிக்க வழிவகுத்துக் கொடுப்பார். மேலும் இராகு-சுக்கிரனோடு இணைந்திருப்பதால் ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகமும் உண்டு. குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சீர்வரிசை பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். குரு வக்கிரமாக இருந்தாலும் அதன் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவது யோகம்தான். குரு பார்க்கக் கோடி நன்மை, என்பதால், வியாழக்கிழமைதோறும் விரதமிருந்து குருபகவானை வழிபடுவது நல்லது. செவ்வாய் இம்மாதம் வக்கிரமடையப் போகிறார். எனவே செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவதோடு சஷ்டி திதி அன்று அறுபடை வீடுகளில் அருகிலிருக்கும் படைவீட்டிற்குச் சென்று வழிபட்டு வருவதும் நல்லது. 3 இல் கேது, 9 இல் இராகு இருப்பதால் யோகபலம் பெற்ற நாளில் இராகு-கேது பிரீதிகளைச் செய்யுங்கள்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். அஷ்டம இலாபாதிபதியான புதன் 9 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். முன்னோர் சொத்துகளில் முறையான பங்கீடு கிடைக்கும். தந்தை வழி உறவினர்கள் வழியில் நடக்கும் சுபகாரியங்களை முன்னின்று நடத்தும் யோகம் உண்டு.

குரு வக்கிர நிவர்த்தி

ஜூலை 4 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். தன பஞ்சமாதிபதியாகி வக்கிர நிவர்த்தியாவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். செல்வ வளம் பெருகும். சேமிப்பு உயரும் அதே நேரத்தில் விரய ஸ்தானத்தில் குரு இருப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீடுகட்டும் யோகம், கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் சூழ்நிலை, கல்யாணம் கைகூடுதல் போன்றவை நடைபெறும் நேரமிது.




சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்மராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். இது யோகமான நேரமாகும். 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் தொழில் ஸ்தானத்திற்கு வரும் பொழுது தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். இலாபம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். உதிரி வருமானங்கள் பெருகும். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் முயற்சிகள் செய்திருந்தால் நல்ல இடத்தில் வேலை கிடைக்கும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும்.

மகர செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிரமடைகிறார். இருப்பினும் உச்சம் பெற்றிருப்பதால் மிகுந்த நன்மை ஏற்படும். இடம், வீடு, வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது. உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும்.

இம்மாதம் ஆனைமுகப் பெருமானை வழிபட்டு ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். நடராஜர் தரிசனம்பார்த்தால்நல்ல வாய்ப்புகள்வந்து சேரலாம்.


பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

எடுத்த காரியங்களை எளிதில் முடிக்கும் மாதம் இதுவாகும். மக்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு உயரும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்னிய உறவு ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். தாய் வழி ஒத்துழைப்பும், சகோதர வர்க்கத்தினரால் சந்தோசமும் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு உண்டு. எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வாகனம் வாங்கும் யோகம் முயற்சி கைகூடும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் தொடர்ந்து வழிபடுவது நல்லது.

## செல்வ நிலை உயரும் நேரம்!

(தொடரும்)

# 7 தமிழர்களையும் விடுவிப்பதில்லை என்பதில் மோடி அரசு உறுதியாகவுள்ளது



(சென்னை)

“எக்காரணத்தைக் கொண்டும் ஏழு தமிழர்களை விடுதலை செய்யக்கூடாது” என்பதில் மோடி அரசு உறுதியாய் இருப்பது தெளிவாகிறது என தமிழக வாழ்வுரிமைக் கட்சி தெரிவித்துளளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கும் ஏழு தமிழர்களையும் விடுவிக்கக்கோரி தமிழக அரசு அனுப்பிய மனுவை ஜனாதிபதி ராம்நாத் கோவிந் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள தமிழக வாழ்வுரிமைக் கட்சி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது சதிச்செயலிலோ ஈடுபடாதவர்கள் என்று நிரூபிக்கப்பட்ட நிலையிலும் 28 ஆண்டுகளாக சிறையில் வாடுகின்றனர் பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட 7 தமிழர்கள்.

இவர்களை விடுவிக்கக் கோரிய தமிழக அரசின் சட்டமன்றத் தீர்மானத்தையும் விண்ணப்பத்தையும் மத்திய அரசின் சொல்படி குடியரசுத் தலைவர் நிராகரித்திருக்கிறார்.

இதை வன்மையாகக் கண்டிக்கிறது தமிழக வாழ்வுரிமைக் கட்சி. 2014 மற்றும் 2016ஆம் ஆண்டுகளிலும் இதே கோரிக்கையை தமிழக அரசு விடுத்து, அதுவும் மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டது.

ஆனால் நிராகரித்ததற்கான சரியான, சட்டப்படியான காரணத்தை மத்திய அரசு சொன்னதில்லை. சட்டத்தைக் குழப்பி நீதிமன்றத்துக்குள் ஒளிந்துகொண்டு காலத்தைக் கடத்தும் கயமைச் செயலைச் செய்து கொண்டிருக்கிறது மத்திய பா.ஜ.க. மோடி அரசு.

இதிலிருந்து, ‘எக்காரணத்தைக் கொண்டும் 7 தமிழர்களை விடுதலை செய்யக்கூடாது’ என்பதில் மோடி அரசு உறுதியாய் இருப்பது தெளிவாகிறது.

இதனால் இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கில் விடுதலைத் தீர்ப்பைப் பெற முடியாதபடி முட்டுக்கட்டையாகவே மோடி அரசு இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆகவே அரசமைப்புச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின்படி தமிழக அமைச்சரவையே முடிவெடுத்து ஆளுநர் மூலம் 7 தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும். இதற்கு எந்தத் தடையும் இல்லை.

“கையிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்” என்பதற்கேற்ப, உடனடியாக தமிழக அமைச்சரவை கூடி 161ஆவது பிரிவின்படி 7 தமிழர்களையும் விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கிழக்கில் திடீரென சூறைக் காற்று வீடுகள் சேதம், மீனவர் உயிரிழப்பு





(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளில் திடீரென வீசிய சூறைக்காற்று, மழை, இடி மின்னலால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அசாதாரண காலநிலையால் களுவாஞ்சிக்குடியில் மீனவர்ஒருவர்சுழியில்அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் - ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பெரியபுல்லுமலை உள்ளிட்ட இன்னும் சில இடங்களில் வீசிய சூறைக் காற்றின் காரணமாக சுமார் 15 இற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில்சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் மற்றும் பிரதேச செயலாளர் என். வில்வரெட்ணம் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடுகள் வழங்குதல் தொடர்பில் ஆராய்ந்ததுடன், நிர்க்கதியானவர்களுக்கு சமைத்த உணவுகளும் உலர் உணவுகளும்வழங்கப்பட்டன.

காற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்ததுடன், காற்றின்வேகம் தணிந்த பின்னர் அவர்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி, கல்லாறு, கோட்டைக்கல்லாறு போன்ற பிரதேசங்களிலும் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மற்றும்சாய்ந்தமருது பிரதேசத்திலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சாய்ந்தமருது பிரதேசத்தில் பொலிவேரியன் வீட்டுத்திட்டத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காரியப்பர் வித்தியாலயத்தின் வகுப்பறைகளின் கூரைகள் காற்றில் அடித்துச்சொல்லப்பட்டிருந்ததுடன் சுமார் 65 வீடுகளின் கூரைகள் முழுமையாகவும் சில பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் காரியப்பர் வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

கல்முனையில் வீசிய சூறைக் காற்றினால் வீடுகள், குடிசைகள், சேதமடைந்ததோடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இயந்திரப்படகுகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டு கடலுக்குள் தள்ளப்பட்டன.

கடலினுள் இழுத்துச் செல்லப்பட்ட படகுகளை மீனவர்கள் மீண்டும் இழுத்துக் கரை சேர்த்தனர். (இ)

# பிக்குமாருக்கு எதிரான வழக்குகளைப் போன்று ஏனைய வழக்குகளையும் துரிதப்படுத்துங்கள்

## அரசிடம் கேட்கிறார் அமைச்சர் சம்பிக்க



(கொழும்பு)

பிக்குமாருக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் வேகத்தில் ஏனைய நபர்களின் வழக்குகளையும் விசாரிக்குமாறு அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு, கொழும்பில் நேற்று நடைபெற்ற நடமாடும் சேவையின் போது ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைவருக்கும் சட்டம் சமமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கடந்த காலத்தில் நடந்த கொலை, கொள்ளைகள், நிதி மோசடிகள், ஊழல்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

பிக்குகளின் வழக்குகளை நடத்தும் வேகத்தில் இந்த வழக்குகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ)

# மகிந்த ராஜபக்ஷ சிறந்த தலைவர் சுற்றியிருந்தவர்கள் தவறிழைத்தனர்

## சுதர்ஷினி எம்.பி. விளக்கம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறந்த தலைவர். எனினும் அவரை சுற்றியிருந்தவர்கள் தவறிழைத்தார்கள் என சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு பெயர் பரிந்துரைக்கப்பட்டு பின்னர் நாடாளுமன்றில் வாக்கெடுப்பின்போது அது சாத்தியப்படாது போனமை தொடர்பிலும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய 16 நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடுத்தகட்ட செயற்பாடுகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பிலான எதிர்வுகூறல்களின் பின்னணி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சி 2015ஆம் ஆண்டு வீழ்த்தப்படுவதற்கு பிரதான காரணம் என்ன என்பது குறித்து அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த ஆட்சிக்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவை சுற்றி இருந்து தவறிழைத்தவர்கள் அவரின் பெயரைப் பயன்படுத்தினார்கள்.

அவற்றை அறிந்த தருணங்களில் சரியான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் அவர் தலைமையிலான ஆட்சியின் மீது விமர்சனங்கள் எழுந்திருக்க வாய்ப்பில்லை. தற்போதும் அவரே ஜனாதிபதியாக இருந்திருப்பார்.

மேலும், பிரதி சபாநாயகராக தன்னை நியமிப்பது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடத்தில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பில் கூட்டு எதிரணியினரின் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போது, ஆதரவளிக்குமாறே குறிப்பிட்டுள்ளார்.


இருப்பினும் அந்த அணியில் உள்ள பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எனது மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக உள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளை பெற்றவராக நான் இருக்கின்றமையால் தனிப்பட்ட அரசியல் நலன்களை மையமாகவைத்து அவர்கள் வாக்கெடுப்பில் பங்கெடுக்காமல் விலகிச் சென்றுள்ளனர்.

என்னுடனான தேர்தல் போட்டியை மட்டும் சிந்தித்து செயற்பட்டதன் மூலம் மறை முகமாக அவர்களும் ஐ.தே. முன்னணிக்கே உதவியிருக்கின்றனர் என சுதர்ஷினி மேலும் தெரிவித்தார். (இ)




# செய்! நல்லதை செய்!



சிவபெருமானே! பக்தர்களில் சிலர் வாழ்வில் ஒரு முறையாவது, கைலாய யாத்திரை வந்து புண்ணியம் தேடுகின்றனர். சிலர், காசி வந்து கங்கையில் நீராடி, உன்னை தரிசித்து நன்மை அடைகின்றனர். ஆனால், இப்படி ஏதும் செய்ய முடியாத நிலையில் உலகில் பலர் இருக்கிறார்களே.... அவர்களின் கதி என்னவாகும்?" எனக்கேட்டாள் பார்வதி.

"பூலோகத்திற்கு போனால் தான் உன் கேள்விக்கு பதில் கிடைக்கும்" என்ற சிவன், அவளுடன் காசி வந்தார். இருவரும் தங்களை முதிய வர்களாக உருமாற்றிக் கொண்டனர்.

தள்ளாடியபடி, விஸ்வநாதர் கோயில் முன் குறுகலான சந்தில் நின்றனர்.

கிழவருக்கு மூச்சு இரைக்க கண்கள் படபடத்தன. தடுமாறி கீழே விழுந்தார். மூதாட்டி அவரை தாங்கிப் பிடித்து, மடியில் படுக்க வைத்து, போவோர் வருவோரிடம், "என் கணவர் உயிர் பிரியும் நிலையில் இருக்கிறார். தவிக்கும் அவருக்கு கொஞ்சம் கங்கை தீர்த்தம் கொண்டு வந்து ஊற்றுங்களேன். வயதான என்னால் எழுந்து போக முடியவில்லை..." எனக் கெஞ்சுவது போல நடித்தாள். யாரும் உதவவில்லை.

சூரியன் மறைந்து இருள் பரவியது. கங்கையில் நீராடுவோர் எண்ணிக்கை குறைந்தது. திருடன் ஒருவன் தன் களைப்புத் தீர கங்கையில் நீராட வந்தான். முதியவரின் நிலை கண்டு இரக்கம் கொண்டான். இருப்பினும் மனதிற்குள், "காவலர்கள் தன்னை அடையாளம் கண்டு, கைது செய்து விடுவார்களே" என்ற பயம் மேலிட்டது.

இருந்தாலும், தன் கைகளால் கங்கை தீர்த்தத்தை மொண்டு வந்து, முதியவரின் வாயில் ஊற்றப் போனான்.

"தம்பி.... என் கணவரின் உயிர் பிரியப் போகிறது. அதனால், உன் வாழ்வில் செய்த நற்செயல் ஏதேனும் ஒன்றை எண்ணியபடி, இந்த தீர்த்தத்தை விடு!" என்றாள் மூதாட்டி. நற்செயல் ஏதும் அவன் வாழ்வில் செய்யாதவன் என்பதால், எதுவும் நினைவுக்கு வரவில்லை. அதேசமயம் பொய் சொல்லவும் அவன் விரும்பவில்லை.

"அம்மா! நான் இதுவரை நற்செயல் செய்தது கிடையாது. தீமை நிறைந்த என் வாழ்வில், முதல் முறையாக இன்றுதான் இரக்கம் கொண்டு நற்செயல் செய்ய வந்தேன். இதை நினைத்தபடியே தீர்த்தம் கொடுக்கிறேன்" என்று ஊற்றினான். அடுத்த நொடியில் இருவரும் சிவபார்வதியாக உருமாறி நின்றனர்.

"இளைஞனே! இன்று முதல் உனக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. வாழ்வின் இறுதியில் நீ மோட்ச கதியும் பெறுவாய். மனதில் இரக்கமும், கையில் புனித தீர்த்தமும், நாவில் சத்தியமும் கொண்ட உனக்கு எப்போதும் இறையருள் துணை நிற்கும்" எனக் கூறி மறைந்தனர். காசி போவதை விட, கைலை தரிசனத்தை விட, ஒரே ஒரு நல்ல செயல் செய்தால் சிவபார்வதி அருள் கிடைக்கும்.




- 1269-பிரான்சில் மஞ்சள் அடையாளம் இல்லாமல் பொதுவில் திரியும் அனைத்து யூதர்களும் 10 வெள்ளி லிவ்ராக்கள் தண்டம் செலுத்த வேண்டும் என ஒன்பதாம் லூயி மன்னர் கட்டளையிட்டார்.
- 1862-ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம் அமெரிக்க மாநிலங்களில் அடிமை முறையைத் தடை செய்தது.
- 1867-மெக்சிகோ பேரரசர் முதலாம் மாக்சிமிலியன் மரண தண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1875-உதுமானியப் பேரரசுக்கு எதிராக எர்செகோவினா எழுச்சி ஆரம்பமானது.
- 1903-பொது வேலை நிறுத்தத்தைத் தூண்டிய மைக்காக பெனிட்டோ முசோலினி பேர்ன் நகரில் கைது செய்யப்பட்டார்.
- 1910-அமெரிக்காவில் வோஷிங்டனில் முதல் தடவையாக தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது.
- 1953-அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்களை சோவியத் ஒன்றியத்துக்கு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு யூலியசு மற்றும் எத்தல் ரோசன்பர்க் என்ற யூதத் தம்பதியருக்கு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது.
- 1961-குவைத் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1988-திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் வியட்நாமின் 117 மாவீரர்களுக்குப் புனிதர் பட்டமளித்தார்.
- 2007-பக்தாதில் அல்-கிலானி பள்ளிவாசலில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 78 பேர் உயிரிழந்தனர், 218 பேர் காயமடைந்தனர்.

**பிறப்புகள்**

- 1566-இங்கிலாந்தின் முதலாம் ஜேம்சு (இ. 1625)
- 1911-டட்லி சேனநாயக்க, இலங்கையின் 2வது பிரதமர் (இ. 1973)
- 1918-கே.சி.நடராஜா, இலங்கை குற்றவியல் சட்டவறிஞர்
- 1928-ப.கிருட்டிணமூர்த்தி, இந்திய திராவிட மொழியியல் ஆய்வாளர் (இ. 2012)
- 1935-சு.ப.திண்ணப்பன், தமிழக-சிங்கப்பூர் தமிழறிஞர்
- 1945-டோபியாஸ் உல்ஃப், அமெரிக்க எழுத்தாளர்
- 1946-மா. சந்திரமூர்த்தி, தமிழக எழுத்தாளர்
- 1951-ஐமன் அழ்-ழவாகிரி, எகிப்திய மெய்யியலாளர், தீவிரவாதி
- 1960-லெப்டினன்ட் சங்கர், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (இ. 1982)
- 1980-நாகைஸ்ரீராம், தமிழக கர்நாடக இசைக் கலைஞர்
- 1985-காஜல் அகர்வால், இந்திய நடிகை

**இறப்புகள்**

- 1867-முதலாம் மாக்சிமிலியன், மெக்சிகோ மன்னர் (பி. 1832)
- 1990-க.யோகசங்கரி, இலங்கைப் போராளி, அரசியல்வாதி
- 2006-சுரதா, தமிழகக் கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர், எழுத்தாளர் (பி. 1921)
- 2012-ராபின் மெக்கிலாசன், ஆங்கிலேயத் தமிழறிஞர், கிரேக்க செவ்வியல் அறிஞர்
- 2013-ஜேம்ஸ் கண்டோல்பினி, அமெரிக்க நடிகர், தயாரிப்பாளர் (பி. 1961)
- 2016-குமரகுருபரன், தமிழகக் கவிஞர் (பி. 1974)

**சிறப்பு நாள்**

- விடுதலை நாள் (அங்கேரி)
- தொழிலாளர் தினம் (டிரினிடாட் மற்றும் டொபாகோ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 120 | 160 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 400 | 300 | 300 |
| தக்காளி | 300 | 300 | 300 | 240 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 200 | 90 | 160 | 160 | 180 |
| கரட் | 230 | 400 | 200 | 320 | 400 | 280 |
| பூசணி | 50 | 40 | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 160 | 80 | 120 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 40 | 35 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 110 | 170 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 400 | 140 | 220 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 80 | 120 | 90 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 200 | 250 | 150 | 240 | 200 | 180 |
| லீக்ஸ் | 250 | 400 | 220 | 320 | 400 | 300 |
| பீற்றூட் | 140 | 100 | 60 | 120 | 160 | 100 |
| கறிமிளகாய் | 250 | 400 | 80 | 240 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 300 | 280 | 300 | 400 |
| போஞ்சி | 320 | 400 | – | 400 | 320 | 220 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | – | – | 100 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 40 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 100 | 100 | 120 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 30-60 | 65 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 130 | 250 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 350 | – | 280 | 320 | 300 |
| முள்ளங்கி | 120 | 120 | 40 | 120 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | – | 60 | 100 | – |

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரவே புளித்த மோரும்...
~ ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் தலைமைப் பதவியை ஏற்பார்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள பொதுஜன பெரமுனவின் 2ஆவது மாநாட்டின்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வார் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பொதுச் செயலாளர் தற்போது சிறிகொத்தாவில் உள்ளவர்களுக்கு தேவையான விதத்திலேயே செயற்படுகின்றார் என்றும் இதன்போது ரோஹித அபேகுணவர்தன குற்றம் சுமத்தியுள்ளர்.

அத்தோடு பொதுஜன பெரமுனவின் சின்னமான மொட்டு இன்னும் சிறிது காலத்தில் வெடித்து விடும் என கடந்த தினத்தில் நடைபெற்ற கூட்டமொனறில் கலந்து கொண்டபோது மகிந்த சமரசிங்க தெரிவித்த கருத்திற்கு பதிலளித்த ரோஹித அபே குணவர்தன மொட்டு ஒரு போதும் வெடிக்காது என தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களின் மீது அன்பு கொண்டவர் என்றும் அவருடன் இணைந்திருப்பதால் மக்கள் எம்மீது அன்பு வைத்துள்ளனர் என்றும் இதன்போது ரோஹித அபேகுணவர்தன குறிப்பிட்டார். (ம)

# மன்னார் மனித எலும்புக்கூடு அகழ்வு பணி நீதவான் முன்னிலையில் ஆரம்பம்

மன்னாரில் இடை நிறுத்தப்பட்ட மனித எலும்புக்கூடு அகழ்வுப்பணிகள் மீண்டும் விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ். ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆரம்பமானது.

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள விற்பனை நிலைய வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகள் அகழ்வுப் பணிகள் திங்கட்கிழமை 15ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா இட மாற்றம் பெற்று மல்லாகம் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்திற்கு புதிய நீதிபதியாக ஹெப்பட்டிக் கொல்லாவ மாவட்ட நீதிபதி ரி.ஜெ.பிரபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை இடைநிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள் நேற்று திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் 15ஆவது தடவையாகவும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ். ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ்சோமதேவாவின் குழுவினரும் இணைந்து அகழ்வுப் பணியை மேற்கொண்டனர். (ம)

# கண்ணகியம்மனின் தேர்த்திருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கனப்பாய் அருள்மிகு கண்ணாம்பிகா சமேத கன்னலிங்கேஸ்வரர் ஆலய (கண்ணகி அம்மன் ஆலயம்) தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து பி.ப 3.30 மணிக்கு தேர் உற்சவம் இடம்பெறும்.

மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு நடேசர் அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ம)

# வவுனியா நெடுங்கேணியில் இளைஞனைக் காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

வவுனியா நெடுங்கேணி, சேனைப்புலவு பகுதியில் 21 வயதுடைய இளைஞன் ஒருவரைக காணவில்லை என்று நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 17.05.2018 அன்று காலை 10.30 மணியளவில் நெடுங்கேணி சேனைப் புலவு பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் கடைக்குச் சென்று வருவதாக தெரிவித்து விட்டுச் சென்ற 21 வயதுடைய இராஜகோபால் கஜமுகன் என்ற இளைஞன் வீடு திரும்பாததையடுத்து இளைஞனின் தாயாரினால் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் கடந்த மாதம் 23ஆம் திகதி இளைஞனின் மோட்டார் சைக்கிள் வீட்டிற்கு சற்றுத் தொலைவிலிருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் அதைப் பொலிஸார் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இன்று (நேற்று) வரையில் குறித்த இளைஞன் தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து குறித்த இளைஞனின் தாயார் வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இளைஞனின் தாயார் தெரிவித்துள்ளார். (ம-281)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வர்ணாசிரமத் தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமா?**

வைசியன் வேத கல்வியைக் கற்ற பின்பு குடும்ப வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு, விவசாயம், பசு வளர்த்தல், வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டு குடும்ப வாழ்க்கையை சுபீட்சமாகக் கொண்டு செல்லலாம். இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துத் தொண்டு செய்ய வேண்டும். சத்தியம், தர்மம், கருணை, அஹிம்சை முதலியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இறைவனைப் பரப்புதல் என்ற உலக சேவையில் ஈடுபட்டு புருஷார்த்தங்களை அடைந்து மோட்சத்தைச் சென்றடைய வேண்டும். *(தொடரும்)*

# பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த ‘சொல்டா’ துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

பல துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த “சொல்டா” என அழைக்கப்படும் அசித பிரேமதிலக, துப்பாக்கியுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றவியல் பொலிஸ்பிரிவினரால் பொரளை பகுதியில் வைத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சொல்டா, பாதாள உலகத் தலைவன் “அங்கொட லொக்கா” உடன் இணைந்து பல குற்றச் செயல்கள் புரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவ மற்றும் மாலபே ஆகிய பிரதேசங்களில் சமீபத்தில் இடம்பெற்ற இரண்டு கொலைச் சம்பவங்களுடன் சொல்டாவுக்கு தொடர்புகள் காணப்படுவ தாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# கோயிலில் ஆட்கள் குறைந்து கொஸ்பிற்றலில் கூடிய காதை

மண் வீட்டில், பூவரசம் வேலிச் சலசலப்பில், வீட்டின் தலைவாசல் திண்ணையில், பழங்கஞ்சி குடித்து துலா மிதித்து தண்ணீர் பாய்ச்சி வயல் விதைத்து நெல் அறுவடை செய்து பச்சைப் பெருமாள் அரிசியில் கஞ்சி காய்ச்சிக் குடித்த காலம்.

மொட்டைக் கறுப்பன் அரிசியில் சோறு; பட்டி தந்த பால் நெய்; வீட்டு முற்றத்து வேப்பம் பூவில் செய்த வடகம்; உழுத்தம் களிப் பிட்டு; ஒடியல் கூழ்; புழுக்கொடியல் மாக் குழையல் உணவாய் உண்டிருந்த காலத்தில் ஒரு வியாதியும் இல்லை.

சலரோகம், உயர் குருதி அழுத்தம், புற்றுநோய், மாரடைப்பு, எதுவும் கிட்ட நெருங்காத பாலை மரத்து வைரத்தில் உடல் ஆரோக்கியம்.

ஆனால் இன்று எல்லாம் அதிரடி. இரண்டு நிமிடத்தில் அவியும் நூடில்ஸ், நொறுக்கு மிக்சர், நஞ்சு தெளித்த கீரை, கூடிய விளைச்சல் என்ற பேராசையில் கொட்டிப் பரவிய உர வகைகள், வாழைப்பழத்துக்கு அபிஷேகம் செய்யும் போமலின் மருந்து, வெளிநாட்டில் இருந்து பிள்ளைகளின் வரவுக்காக காத்திருக்கும் தந்தையின் பூதவுடல்போல ஏழெட்டு நாள் குளிர்கட்டிக்குள் அடங்கிக் கிடக்கும் மீன்கள்.

போதாக்குறைக்கு 45 நாளில் மாரடைப்பு வந்த புறொயிலர் கோழி, இதுதான் போதாதோ என்றால், புறொயிலரின் பேரன்ட் என எல்லாமும் சேர்ந்து எங்கள் ஆரோக்கியத்தை நாசமாக்கி, இனிய வாழ்வை வேதனையாக்கி இந்த உலகத்தையே நரகமாக்கிவிட்டது.

பதற்றம், பதகழிப்பு, அவசரம் என இயந்திர வாழ்வாகிப்போக, ஆலயங்களில் ஆட்கள் இல்லை, அடியார் கூட்டம் இல்லை என்றாகி; இறைவனை வழிபாடு செய்வது, கோயிலில் கூடுகின்ற உறவுகள் சந்தித்துக் கதைத்து ஆறுதல் அடைவது, கடவுளைத் தூக்கி வருவது, அங்கு இசைக்கப்படும் மங்களவாத்தியத்தில் மனம் மகிழ்வது.

சுண்டல், கடலை, நிறையுணவு மோதகம் என்ற பிரசாதங்கள் என எதுவும் இல்லை என்றாகிப் போக,

கோயில்களிலும் மேளம் மணி யாவும் மின்சார சாதனங்களாகிவிட்டன. சுவாமி காவும் வண்டில்களும் இயந்திரமாகிக் கொள்ள, இப்போது ஆட்கள் கொஸ்பிற்றல்களில் கூடிக் குவிந்து பரீட்சைப் புள்ளி போல சுகர் வீதம் கணித்துவிட்டு, காசைக் கட்டி குளிசை எடுத்து; நாம் மறந்துபோன மூன்று நேரப் பாராயணத்துக்குப் பதிலாக ஒரு சிறங்கை மாத்திரையை மூன்று வேளை விழுங்கி வாழ்கின்றோம்.

அந்தோ! இப்போது சிறுநீரக வியாதியும் எங்களிடம் அதிகரிக்குதாம். குடிநீரெல்லாம் யூரியா உரமாகிப் போனால், சிறுநீரகம் என்ன தண்டவாளத்து இரும்போ நின்று பிடிப்பதற்கு.

ஓ இறைவா! அன்றைய எங்கள் ஆரோக்கியம் எப்போது மீண்டும் திரும்ப வரும் என்ற இந்த ஏக்கமும் என்ன வியாதியைத் தருமோ யாரறிவார்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உண்மை என்னும் பாதையில் இருந்து அணுவளவும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனம் செலுத்துங்கள்.
- அமைதி என்னும் துறைமுகத்தை அடைவதற்கு முன் பெரும்புயல்களையும், அலைகளையும் சமாளித்துத் தான் ஆக வேண்டும்.
- கடுமையான சோதனைகளை எதிர்கொள்ளாமல் மனிதன் சிகரத்தை எட்டிப் பிடிக்க முடியாது.
- மற்றவர்களுக்கு நன்மை செய்பவன் தர்மவழியில் செல்கிறான். தீமை செய்பவன் பாவவழியைத் தேர்ந்தெடுக்கிறான். அதற்கான பலனை அவரவர் பெறுவது உறுதி.
- வாழ்வில் ஒவ்வொரு நாளும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். லட்சியத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அதற்கு மாறான எதைப் பற்றியும் சிந்திக்காதீர்கள்.
- எப்போதும் நேர்மையைப் பின்பற்றுங்கள். விடா முயற்சியுடன் போராடுங்கள். உண்மையாக உழையுங்கள். தன்னம்பிக்கையை கைவிடாதீர்கள். லட்சியத்தை நிச்சயம் அடைந்து விடுவீர்கள்.

# மரண அறிவித்தல்



# குமாரசாமி ஜெயம்

## (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் இலங்கை வங்கி)

இல.9/3, வெள்ளாந்தெருவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ஜெயம் அவர்கள் நேற்று (18.06.2018) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி பராசக்தி தம்பதியினரின் பாமிகு மகனும் காலஞ்சென்ற இராசாத்தி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிட்டினர் தெய்வானை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, ஜெயலட்சுமி, கருணாகரன், தனலட்சுமி, கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஸ்ரீமணி, இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ரஞ்சித் காந் (ஆசிரியர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரஞ்சித் சோபனா (மக்கள் வங்கி நாரகன்பிட்டி), சதீஸ்காந் (பிரான்ஸ்), ஸ்ரீகாந் (லண்டன்), நாகநந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிகலா (கொக்குவில் கிழக்கு நாமகள் பாடசாலை -ஆசிரியர்), முகுந்தன் (விரிவுரையாளர் திறந்த பல்கலைக்கழகம் கொழும்பு), சபிதா (லண்டன்), சுரேஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், அபிஷேக் (கொழும்பு), சின்மயி (கொழும்பு), நவீன், காசினி, பவித்திரா, கிஷோலா (பிரான்ஸ்), திருஷிக் (பிரான்ஸ்), மகரந் (லண்டன்), திரிக்ஷா (பிரான்ஸ்), ஷஸ்வின் (பிரான்ஸ்), சமித்திரி (பிரான்ஸ்), ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப 02..00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

118, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

(C-3009)

## மல்லாக குழு...

வித்துள்ளனர்.

இவர்களில் இம் மோதல் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவரும் மற்றும் மூவருமாக ஐந்து பேர் இம் மோதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இத் துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட மனிதவுரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் கனகராஜ் நேரில் சென்று சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.குறிப்பாக துப்பாக்கி சூடு இடம்பெற்ற பகுதிக்கு முதலில் சென்ற அவர் அங்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு தகவல்களை பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரது உறவினர் மற்றும் கைது செய்யப்பட்டவர்களது உறவினர்களை சந்தித்து தகவல்களை சேகரித்திருந்தார்.

இதன்போது அவரிடம் அவ் உறவினர்கள், இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களையும் உயிரிழந்தவரையும் வைத்தியசாலைக்கு தூக்கி சென்ற எமது பிள்ளைகளை பொலிஸார் மோதலில் ஈடுபட்டதாக கூறி கைது செய்துவிட்டதாக தெரிவித்தார்கள்.

இதனை தொடர்ந்து சம்பவத்தில் நேரடியாக தொடர்புபட்டிருந்த உயிரிழந்தவரின் மருமகனான டெனிஸ்மன் மற்றும் நேரில் சம்பவத்தை கண்டவர்களிடமும் கனகராஜ் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவர்கள், தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைத்து நீதிபதி சம்பவத்தை நேரில் கண்டவர்கள் இருக்கின்றீர்களா என கேட்ட போது, அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவர்கள் தாம் கண்டதாக தெரிவித்திருந்தனர். இதன் பின்னர் காயமடைந்திருந்த இருவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டுவிட்டு வந்த நீதிபதி வெளியில் இருந்த இம் மூவரையும் கைது செய்ய கூறியிருந்தார்.

இவர்களே காயமடைந்தவர்களையும் உயிரிழந்தவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவர்கள். உண்மையில் மோதலில் ஈடுபட்ட குழுவினரை கைது செய்யாமல் காப்பாற்றிவிட்ட பொலிஸார் தேவையில்லாது ஆலயத்திற்கு பூஜைக்கு வந்த இவர்களை கைது செய்துள்ளது என தெரிவித்திருந்தனர்.

மேலும் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டவர் தனது மருமகனை காப்பாற்றவே அங்கு வந்திருந்ததாகவும் அவருக்கும் அங்கு இடம்பெற்ற மோதல் சம்பவத்திற்கும் தொடர்பில்லை எனவும் தெரிவித்ததுடன் பொலிஸார் அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் கூறினார்கள். உண்மையில் அவருக்கு மோட்டார் சைக்கிள் கூட ஓடத் தெரியாது எனவும் தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறிய விடயங்களை பதிவு செய்த மனிதவுரிமை ஆணையாளர் மேலதிக விசாரணைகளை மேற் கொள்வதாக அவர்களுக்கு தெரிவித்திருந்தார்.

**துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரிடம் விசாரணை.**

இதேவேளை இத் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டிருந்த சுன்னாகம் பொலிஸ சார்ஜனிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அவரிடம் சம்பவம் தொடர்பான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மூத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## 50 வீதமான காணி...

யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் நேற்று திங்கட்கிழமை யாழ். மாநகரச சபையில் இடம்பெற்ற முக்கிய சந்திப்பை அடுத்தே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் நான் மாநகர முதல்வராக, பதவியேற்ற பின்னர் சந்திக்க வேண்டுமென ஆர்வம் கொண்டமையினால் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. சந்திப்பின் போது, பல விடயங்கள் பேசப்பட்டன. அதில் 3 விடயங்கள் முக்கியமாக பேசப்பட்டன.

மாநகர சபை முதல்வராக பொறுப்பேற்ற பின்னர் சாதிக்க கூடியதாக இருக்கின்றதாக என்றும், மாகாண சபை மக்களுக்கான தேவை

களை சரியான முறையில் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக் காணப்படுகின்றதாகவும், அவை உண்மையா என்றும் உயர்ஸ்தானிகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மாகாண சபை அபிவிருத்தி திட்டங்களை செய்யத் தவறியதை ஒப்புக்கொண்டுள்ளார். அத்துடன், கட்சி ரீதியாக வேறுபட்டிருந்தாலும் சகல உறுப்பினர்களையும் இணைத்து மிக ஒற்றுமையுடன், அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கின்றோம்.

கட்சி வேறுபாடுகள் சகல மக்களின் வாழ்க்கை தரத்தினையும் அபிவிருத்தியையும் முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒரே எண்ணப்பாட்டினைக் கொண்டிருப்பதுடன், புதிய சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு வெளிநாட்டு நிதிகளையும், ஏனைய நலன் விரும்பிகளின் நிதிகளையும் எதிர்பார்த்து இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மாகாண சபை உறுப்பினராக இருந்து மாநகர சபைக்கு வருகை தந்துள்ளதுடன், பல சவால்களை எதிர்நோக்கியிருப்பீர்கள்.அத்துடன் மாகாண சபையின் பல குறைபாடுகள் தொடர்பிலும், ஆராய்ந்தார்.

எமது மக்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய முடியாமல் இருக்கின்றார்கள்.பொருளாதாரத்தினை ஈட்டிக்கொள்வதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை.

நாட்டில் உள்ள பொருளாதார சூழல், வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழல், புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி புதிய வேலைவாய்ப்பினை வழங்க முடியாத நிலை, அத்துடன், மக்களுக்குத் தெரிந்த தொழில்களை மேம்படுத்த சந்தைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்க முடியாத சூழ்நிலை. அவ்வாறான காரணங்களினால், எமது மக்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய முடியாத நிலை காணப்படுகின்றது என தெரிவித்துள்ளார். (ம)

## சிங்கள மக்கள்...

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டவ்ரிஸ்க்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், உயர்ஸ்தானிகர் பலமுறை என்னை சந்தித்துள்ளார். இம்முறை சற்று வித்தியாசமான சந்திப்பாக அமைந்தது. அதாவது நாங்கள் அரசுக்கு எதிராக எதுவும் கூறக் கூடாது, அரசுடன் சேர்ந்து செல்ல வேண்டும். நீங்கள் குட்டையை குழப்புகிறீர்கள், அவ்வாறு செய்தால் பிரச்சினை ஏற்படும் என தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்துக்கு எனது பதிலை தெரிவித்திருந்தேன். இந்த அரசை நம்பி நாம் 2016ஆம் ஆண்டு ஒரு தீர்வுக்கு வரலாம் என நினைத்தோம்.வரவில்லை. 2017ஆம் ஆண்டு தீர்வு வரும் என நினைத்தோம் வரவில்லை, 2018ஆம் ஆண்டு முடிவதற்குள் தீர்வை அடைவோம் என எமது கூட்டமைப்பின் தலைவர் கூறியுள்ளார். ஆனால் இதுவரை எதுவும் நடந்ததாக தெரியவில்லை. அரசாங்கம் ஒன்றை கூறுகிறது வேறு ஒன்றை செய்கிறது.


ஆகவே இந்த நிலையில் நாம் இங்கு நடக்கும் உண்மைகளை எடுத்துக்கூற வேண்டிய அவசியம் எமக்குள்ளது. அதனால்தான் சில விடயங்களை நான் வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

நாம் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினால் சிங்கள மக்களுக்கு ஏன் கோபம்வர வேண்டும் என்பது எமக்கு புரியவில்லை. எமது உரித்துக்கள் பறிக்கப்பட்டுள்ளன. அதை திருப்பித் தாருங்கள் என்றால் அவர்கள் கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்தேன். குறித்த கருத்தை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டார்.

மேலும் ஜெனிவா தீர்மானம் அடிப்படையில் அரசு தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவார்களா என்ற கேள்வி கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்டது.

அரசு மிகவும் தாமதமாக நடவடிக்கை

## ஞானசார தேரருக்கு ஆதரவாக கொழும்பில் 500ற்கும் மேற்பட்ட பிக்குகள் ஆர்ப்பாட்டம்



எடுப்பதை ஏற்றுக்கொண்டார். இன்னும் சிறிது காலம் இருப்பதால் அவர்கள் கடப்பாட்டை ஈடு செய்யவேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டார்.

தம்மால் இயலுமான அளவு அரசுக்கு கூறிவருவதாகவும் நடைமுறையில் சாத்தியமாவது தொடர்பாக பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என தெரிவித்தார்.

வெளிப்படைத்தன்மை பொறுப்புக்கூறல் தொடர்பான விசாரணை செய்வதற்கு விசாரிக்கும் குழுக்கள் மக்களின் ஆதரவை பெற்றிருக்க வேண்டும் என அவரே தெரிவித்தார்.

அவ்வாறான ஆதரவை பெறக்கூடிய நீதிமன்ற குழு இலங்கையில் ஏற்படுத்த முடியுமா என சிந்தித்து பார்க்க வேண்டும் என கூறினேன். மூன்று சிங்கள சட்டத்தரணிகள் ஒரு விதமான காரணத்தை தமிழர்களுக்கும் ஒருவிதமான காரணத்தை சிங்களவர்களுக்கும் தெரிவித்து தீர்ப்பு தந்ததாக தமது நூலிலே கூறியுள்ளார்கள். அந்தநிலை இருக்கும் போது வெளிநாட்டு நீதிபதிகளை அல்லது சட்டத்தரணிகளை உள்ளடக்கி விசாரணை குழு அமைக்க வேண்டும் என கூறினேன் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## சந்திக்காமல்...

ரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய பரிதாபம் நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறுவர்களை பாதுகாப்போம் எனும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தில் கலந்துகொண்டார்.

இந்நிலையில், ஜனாதிபதியிடம் கோரிக்கை கடிதம் ஒன்றை கையளிக்க ஆயுள் தண்டனை கைதியான ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் நீண்ட நேரம் காத்திருந்தனர். எனினும் அவர்களை ஜனாதிபதி சந்திக்கவில்லை.

இந்நிலையில், குறித்த இருவரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர். இந்த பிள்ளைகளின் தாய் அண்மையில் உயிரிழந்த நிலையில், தந்தையும் ஆயுள் தண்டனை கைதியாக சிறைவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த இருவ்ரும் தந்தையை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என கோரி ஜனாதிபதியை சந்தித்து தங்களது கடிதத்தை வழங்கிவிட முயற்சி செய்த போதும் அது கைகூடவில்லை.

ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த சிறுவர்களை அந்த வழியால் வாருங்கள் இந்த வழியால் வாருங்கள் என ஒவ்வொரு பாதையாக காட்டிய போதும் அந்த வழியில் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் ஜனாதிபதியிடம் செல்ல அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் அவர்கள் பிறிதொரு அதிகாரியிடம் விடயத்தை கூற அவர் சற்று நேரம் கழித்து வந்து ஜனாதிபதி நிகழ்வு முடிந்து புறப்படும் நேரம் வாகனத்தின் அருகில் சென்று கடிதத்தை வழங்குமாறு தெரிவித்திருந்தார்.

இறுதியில் அதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை அவர்களிடம் விடயத்தை மன்றாட்டமாக தெரிவித்தும் எவரும்

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 500 இற்கும் மேற்பட்ட பிக்குகளால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன் னெடுக்கப்பட்டது.

கொழும்பு - புறக்கோட்டை மத்திய நிலையத்திற்கு அருகிலுள்ள போதி மாராமய விகாரைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவை ஹோமாகம நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து அச்சுறுத்தியமை தொடர்பாக பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞான சார தேரர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார்.

இந்த நிலையில் ஞானசார தேரருக்கு ஆறுமாதத்தில் அனுபவிக்கும் வகையில் ஓராண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

செவிசாய்க்கவில்லை.

இதனையடுத்து, குறித்த கோரிக்கை கடிதத்தை பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனிடம் வழங்கிவிட்டு சிறுவர்கள் ஏமாற்ற த்துடன், வீடு திரும்பினர். (ம)

## முதல்வர் விக்னேஸ்...

கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார்.

வட்க்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற கேள்விகளின் மத்தியில்,

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நூல் வெளியீட்டு விழாவில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கலந்து கொண்டு உரையாற்றுவது பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ம)

## முதலமைச்சர் விக்னேஸ்...

மாவை சேனாதிராசாவை ஆதரிப்பதா என்ற கேள்வி பலர் எழுப்பிவரும் நிலையில் தமது கட்சியின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே மேற்படி தெரிவித்தார்

மேலும் கூறுகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்த காரணத்துக்காகவும் உடையக் கூடாது. மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ள முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு செல்லும் நிலை ஏற்பட்டால் தமிழ் தரப்பு இரண்டாக உடைந்து விடும்.

இதனால் தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கு தமது இலக்கை அடைவதற்கு இலகுவாக அமைந்துவிடும். எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

மேலும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள ஏனைய பங்காளிக் கட்சிகளின் சம்மதத்துடன் தேர்ந்தெடுக்கும் முதலமைச்சர் வேட்பாளர் யாராக இருந்தாலும் அதை புளொட் ஆதரிக்கும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## சுவாசப்பையி...

னூடாக ஏற்பட்ட இரத்த பெருக்கினா லேயே குறித்த நபர் மரணமடைந்துள்ளதாக சட்ட வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 7 மணியள வில் மல்லாகம் சகாயா மாதா தேவாலயத் திற்கு அண்மையில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதில் துப்பாக்கி பிரயோகத்தினை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோக த்தர் ஒருவரே மேற்கொண்டிருந்ததுடன் இதன் போது மல்லாகத்தை சேர்ந்த பாக்கியராஜா சுதர்சன் என்பவர் கொல்லப்பட்டிருந்தார்.

மரணத்திற்கான காரணம்

உயிரிழந்தவரது இடுப்பு கீழ் பகுதியில் இடது பக்கமாக துளைத்து சென்ற துப்பாக்கி குண் டானது அவரது இடது முன்பக்கமாக சுவாசப் பையை துளைத்து சென்றுள்ளது. இதனால் சுவாசப் பையானது முற்றாக சேதமடைந்த மையால் அதனூடாக ஏற்பட்ட இரத்த பெரு க்கே மரணம் நிகழ்வதற்கான காரணமாகி யுள்ளது. மேலும் குறித்த நபரது உடலில் மோதல் இடம்பெற்றதுக்கான சான்றுகள் இருப்பதாகவும் குறிப்பாக அவரது நெற்றிப் பகுதியில் அடி காயம் காணப்படுவதுடன் கண்ணின் கீழ் பகுதியிலும் காயமொன்று காணப்படுகின்றது.

இவை தவிர உடலின் தோள் மூட்டு பகுதி யில் கண்டல் காயங்களும், இடது பக்க கையில் துப்பாக்கி குண்டானது உராய்ந்து சென்ற காயமும் காணப்பட்டுள்ளது. அத்து டன் அவர் அணிந்திருந்த ரீ-சேட்டானது கிழி ந்த நிலையில் காணப்பட்டிருந்ததாகவும் சட்ட வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டு ள்ளது.

மேலும் உயிரிழந்த இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின் நேற்றி ரவு 7.15 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் முன்னி லையில் இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அத னையடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்று 24 மணி நேரங்க ளின் பின்னரே சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. உடற்கூற்று பரிசோதனை தொடர்பான அறிக்கை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்வைக்கப்படும் என தெரி விக்கப்பட்டது. (ம-4-9)

## ஒரே குடும்பத்...

னால் உயிரிழந்தார்.

வவுனியா கரப்பன்காட்டை சேர்ந்த றியோன் தம்பதிகளின் இரண்டு பெண் குழ ந்தைகளும் இருதய நோயினால் பாதிப்புக்கு ள்ளாகி சிகிச்சை பெற்று வந்துள்ள நிலை யில் கடந்த 22.05.2018 அன்று 8 வயதான தன்சிகா என்ற சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை மற்றைய சகோதரியான 7 வயதான சரனிக்கா எனும் சிறுமி அநுராத புரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலை உயிரிழந்து ள்ளார்.

மேலும் குறித்த சகோதரிகளின் மூத்த சகோதரனும் தனது ஏழு வயதில் இதே நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தமை யும் குறிப்பிடத்தக்கது. ஒரே குடும்பத்தில் தொடர்ந்து சிறார்களின் உயிரிழப்பு நடந் தமை வவுனியாவையே சோகத்திற்குள்ளாக் கியுள்ளது. (ம)

## அடுத்த முதல்வ...

தலைமைக்குழு கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ரெலோ அமைப்பின் தலைமைக் குழு வின் கூட்டம் அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்ப ட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் முக்கியமாக எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற விட யம் கலந்தாலோசிக்கப்பட்டது. அத்துடன் தமி ழ்த் தேசிய கூட்டமைப்பை விஸ்தரிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனித்து ஆட் சியமைக்கும் விதமாக வெற்றியடைவதெ னில், முதலமைச்சரும் அதில் இணைக்கப் பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டதுடன் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனையே மீண்டும் களமிறக்க வேண்டுமென பலரும் வலியுறுத்தியிருந்த னர். மாவை சேனாதிராஜாவை முதலமை ச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு பலர் எதிர் ப்பு வெளியிட்டனர்.

விக்னேஸ்வரனை இணைத்துக்கொள் வதால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியனவும் கூட்டமைப்பி ற்குள் உள்ளீர்க்கப்படலாம், அப்படியான கூட் டணிதான் தேர்தலில் வெற்றியடையும் கூட் டணியென பலரும் அபிப்பிராயம் தெரிவித்த னர். இல்லையாயின் முதலமைச்சர் தலை மையில் உருவாகும் அணியுடன் இணை ந்து முதலமைச்சரை வேட்பாளராக நிறுத்தி ஏனைய கட்சிகளை இணைத்து போட்டியிடு வதாகவும் சிலர் தெரிவித்தனர்.

இருப்பினும் குறித்த கலந்துரையாடலில் இறுதியாக முதலமைச்சராக விக்னேஸ்வர னையே ஆதரிக்கும் முடிவை உத்தியோகபூ ர்வமாக எடுத்திருக்காவிட்டாலும், அவ்வா றான கருத்தையே உறுப்பினர்கள் பலர் திட மாக தெரிவித்துள்ளனர்.

மேலும் தேசிய பட்டியல் ஆசனம் மற்றும் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை ஆட்சி அமைப்பு போன்ற விடயங்களில் தமிழரசுக் கட்சி ரெலோவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனவும் துரோகம் இழைத்ததாகவும் பலர் சுட்டிக்காட்டியிரு ந்தனர்.

இந்த நிலையிலேயே மேற்குறித்த தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோக பூர்வமாக இந்த முடிவை கட்சி இதுவரை அறி விக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ம-9)

## குழு மோதல்...

ரில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர் பாக தெரியவருகையில்,

யாழ்.நகரை அண்டிய பிறவுண் வீதி பகு தியில் மாணவக் குழுக்களுக்கிடையே கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் குறித்த மோதல் தொடர்ந்ததால் அப்பகுதி வீதியில் போக்கு வரத்து நெரிசலும் அதிகமாக இருந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு சற்று தொலைவில் போக்குவரத்து பொலிஸார் வரு வதைக் கண்ட நபர் ஒருவர், குறித்த மோதல் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரி வித்ததுடன் உடனே சென்று மோதலை தடு த்து நிறுத்துமாறு தெரிவித்தார்.

எந்த பக்கம் மோதல் இடம்பெறுகிறது என பொலிஸார் அந்த நபரிடம் கேட்டுள்ளனர். அவர் மோதல் இடம்பெறும் திசையை காட்டி யுள்ளார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் நின்ற பொலிஸார் மோதல் இடம்பெறும் திசை நோக்கி மெதுவாக சென்றுள்ளனர். பின்னர் திடீரென மோட்டார் சைக்கிளை திருப்பி குறி த்த திசைக்கு எதிர்த் திசையாக அதிவேக மாக அப்பகுதியை விட்டு சென்றுள்ளனர். பொலிஸாரிடம் முறையிட்ட குறித்த நபர் ஆச் சரியத்துடன் செய்வதறியாது அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றுள்ளார்.

பல மணி நேரத்தின் பின்னர் குறித்த குழு மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிரு ந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## தபால் ஊழியர்...

கொள்ளப்படும் என தபால்மா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தபால் திணைக்கள ஊழியர்களின் ஒன்றி ணைந்த தொழிற்சங்க நடவடிக்கை காரண மாக நேற்று 7ஆவது நாளாக தபால் சேவை கள் முடங்கின. இதனையடுத்தே நேற்றிரவு தபால்மா அதிபர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

6/2006 சுற்றறிக்கையில் உள்ளவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தி தபால் திணைக்கள ஒன்றிணைந்த தொழிற் சங்கம் கடந்த திங்கட்கிழமை முதல் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெ டுத்துள்ளது.

நாடுமுழுவதுமுள்ள 24 ஆயிரம் தபால் ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்று ள்ளனர். இதனால் கடந்த 12ஆம் திகதி தொட க்கம் தபால்கள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் விநி யோகத்தல் பணிகள் முடங்கியுள்ளன.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம், 654 தபால் நிலையங்கள் மற்றும் 3 ஆயிர த்து 410 உப தபால்நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் மட்டும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தபால்கள் மற்றும் பார்சல்கள் குவிக்கப்பட்டுள் ளன. அத்துடன், நாடு முழுவதும் 15 இலட்சத் துக்கு அதிகமான தபால்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இதன்மூலம் தினம் ஒன்றுக்கு 170 மில்லி யன் ரூபாய் வீதம் 7 நாள்களில் ஆயிரத்து 190 மில்லியன் ரூபாய் நிதி இழப்பு தபால் திணை க்களத்துக்கு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்ப ட்டுள்ளது. (ம)

## மண்டைதீவு -...

கிராமிய பாலங்கள் அமைக்கும் திட்டத் தின் கீழ் மண்டைதீவு- அல்லைப்பிட்டி இணைப்பு வீதியில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட பாலத்தை வடக்கு மாகாண முதலமை ச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக் கவுள்ளார்.

மண்டைதீவு- அல்லைப்பிட்டி இணைப்பு வீதியில் இப்பாலம் புதிதாக நிர்மாணிக்கப்ப ட்டதை அடுத்து, குறித்த வீதி புனரமைக்கப் படவுள்ளது.

இவ்வீதி புனரமைக்கப்பட்டதும் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்கள் நீங் கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## 60 ஏக்கர் கா...

காணிகளுக்குள் பிரவேசித்தனர்.

களைச் சேர்ந்தவர்கள் நேற்று தமது காணிகளுக்குள் பிரவேசித்தனர்.

இந்த மக்களுக்கு சொந்தமான சுமார் 60 ஏக்கர் காணிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து அவர்களு க்கு இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

வலிகாமம் வட க்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள் வாங்கப்பட்டிருந்த மக்களின் காணி களே நேற்று விடுவி க்கப்பட்டுள்ளன. வலிகாமம் வடக்கு பகுதியிலுள்ள பலாலி வடக்கு, வசாவி ளான் தெற்கு, வசாவி ளான், ஒட்டகப்புலம் மற்றும் மயிலிட்டி துறை ஆகிய கிராம ங்கள் நேற்று விடு விக்கப்பட்டுள்ளது.

இந்த கிராமங்க ளில் பாதுகாப்புப் படை யினரால் அமைக்க ப்பட்டிருந்த முட்கம்பி வேலிகளும் நேற்று முற்பகல் அகற்றப்ப ட்டுள்ளன. இந்தப் பகுதியில் அமைக்க ப்பட்டிருந்த இராணுவ சோதனைச் சாவடி கள் மற்றும் காவலர ண்அகற்றப்பட்டது.(ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-2882)

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கணிதம்
(தரம் 06 தொடக்கம் 11 வரை)
கடந்த 35 வருடகால கற்பித்தலில் அனுபவம் கொண்ட ஆசிரியரினால் உங்கள் இடங்களில் வந்து கற்பிக்கப்படும்.
தேவையான தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.
077 749 2794
MR.C.K.B. தயாளன்


## மரண அறிவித்தல்



### இரத்தினசிங்கம் மோகன்ராஜ் (மோகன்)

பருத்தித்துறை 4ம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் மோகன்ராஜ் (மோகன்) அவர்கள் 15.06.2018 அன்று அகாலமரணம் அடைந்துள்ளார். இவருடைய இறுதி நிகழ்வுகளுக்காக பூதவுடல் நாளை (20.06.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3 மணியளவில் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கோரியடியில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4ம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்

(சி-3004)


வீடு வாடகைக்கு
யாழ்.நகரில் அமைந்துள்ள அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத, அடிப்படையில் வாடகைக்குவிடப்படும். திருமண நிகழ்வுகள், ஏனைய சுப நிகழ்வுகளுக்கு வருபவர்கள் தங்கி நிற்கக் கூடிய சகல வசதிகளுடன் உள்ளது.
தொடர்பு- 077 110 4770

வேலைவாய்ப்பு
Cleaning உடன் Garden வேலை
(வயது:18-35)
நிறுவனம்:
பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்
ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone :- 021 222 2033
(4560)

விசேட சேவை
தங்கள் திருமண, பூப்புனித நீராட்டுவிழா வைபவங்களை மண்டபப் பணத்தை மட்டும் செலுத்தி உங்கள் விருப்பப்படி செய்து மகிழலாம்.
விபரங்கள் நேரில்,
திருமுருகன் மணிமண்டபம்
கரந்தன் வீதி, நீர்வேலி.
(4563)
077 666 0211


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.